JANASAKTHI போன்: 84097 4 பக்கம் ஒரு அணு மலர் 8 இதழ் 281 இலங்கை 10 சதம் REGD. NO. M. 5934

ஆப்பிரிக்க தலைவரின் அப்பீல்

பிரிடோரியா, செப். 25—

தனக்களிக்கப்பட்ட 4 மாத கடுங்காவல் தண்டனையை எதிர்த்து ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. மோரோகா [illegible] அப்பீல் செய்தார். [illegible] கம்யூனிஸ ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது [illegible]

திரு. கொடானே [illegible] என்று நீதிபதி கூறினர். ஜூன் 15ல் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. [illegible] திரு. கொடானேயின் அப்பீல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜனசக்தி

சென்னை	நந்தன, புரட்டாசி 11௳	வெள்ளிக்கிழமை	1952, செப். 26
வெளியூர்	நந்தன, புரட்டாசி 12௳	சனிக்கிழமை	1952, செப். 27

பம்பாயில் அக். 1-ல் பொது ஹர்த்தால்

பம்பாய், செப். 25—

பம்பாய் ராஜ்ய புது வரி—எதிர்ப்பு ஸ்தாபனத்தின் நிர்வாகக் கமிட்டி இன்று கூடியபோது, அக்டோபர் 1-ந் தேதியன்று பம்பாயில் பொது ஹர்த்தால் நடத்துவதென்று தீர்மானித்துள்ளது என்று அதன் தலைவர் [illegible] இன்று அறிவித்தார்.

மோட்டார் வாஹன வரியை உயர்த்தியதைக் கண்டித்து அக்டோபர் 1-ந் தேதியன்று பம்பாய் ராஜ்ய மோட்டார் போக்குவரத்து சொந்தக்காரர்கள் சங்கம் ஒரு அடையாள வேலைநிறுத்தம் செய்யப்போகிறது. அதற்கு ஆதரவு தெரிவிக்கவே இந்த ஹர்த்தாலும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

ராயலசீமாவில் நிலைமை மோசமாகிறது!

சுற்றிப் பார்த்து வந்த மந்திரிகள் முதன் மந்திரியிடம் அறிவிப்பு

அதிக நிவாரண வேலைகள் தேவையென மக்கள் கோரிக்கை!

சென்னை, செப். 25—

சென்ற சில நாட்களாக ராயலசீமா பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்த மந்திரிகள் முதன் மந்திரியிடம், தாங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த பகுதிகளில் நீடித்துவரும் காரணமாக "மோசமாகிக்கொண்டிருக்கும் நிலைமை"யை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இந்தப் பருவத்தில் முதலில் சில நாட்களில் மழை பெய்ததால் விவசாயிகள் நம்பிக்கை கொண்டு மேற்கொண்ட விவசாய வேலைகளெல்லாம் பின்னர் மழை பெய்யாமற் போனதால் வீணாகப் போய்விட்டன, என்பதுதான் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பியுள்ள மந்திரிகள் கொண்டுள்ள அபிப்பிராயம்.

துங்கபத்திரா நதிப் பிரதேசம், கே. ஸி. கால்வாய் பிரதேசம் ஆகிய பகுதிகளைத் தவிர மற்றப் பகுதிகளிலெல்லாம் விவசாயம் வெற்றிகரமாக இல்லை என்பது கர்னூல், பெல்லாரி பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்த ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. என். சங்கரரெட்டியின் அபிப்பிராயம். பல இடங்களில் விவசாய வேலைகள் ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. மக்கள் பெருங் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். துன்பம் எல்லாப் பகுதிகளிலும் பரவியுள்ளது. ஒரு தாலுக்காக்கூட இதற்கு விலக்கல்ல என அவர் கூறினர்.

தாம் விஜயம்செய்த கடப்பா அனந்தப்பூர் ஜில்லாக்களில் நிலைமை "படுமோசமாக" உள்ளதுஎனவும் ஏற்பட்டுள்ள பிரச்சினை மிகப்பெரியது எனவும், பொதுவேலைகள் மந்திரி திரு. என். ரங்கா [illegible] கூறினர். மீண்டும் [illegible]தப் பிரதேசங்களுக்குவிஜயம் செய்து நிவாரணமளிப்பது பற்றி ஆராயப் போவதாக அவர் கூறினர்.

சித்தூர் ஜில்லாவின் நிலைமையும் மிகவும் மோசமானதாகவே இருக்கிறது என திரு. ரங்காரெட்டி கூறினர். பல இடங்களில் குடி தண்ணீருக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும், மீண்டும் ஒரு முறை ராணுவத்தை ஈடுபடுத்தி கிணறுகளை ஆழப்படுத்தினலும் கூட ஏற்பட்டுள்ள கஷ்டத்தைத் தீர்க்க முடியுமா என்பது சந்தேகமே என்றும் அவர் கூறினர்.

தென்கன்னடத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த மந்திரி, அங்கும் மேற்கண்ட நிலைமையே இருப்பதாகக் கூறினர்.

ராயலசீமா பிரதேசங்களில், [illegible]ப்பாக அனந்தபூர் பகுதி[illegible] நிலைமை மிகவும் மோசம் [illegible]று கிராம நலன மந்திரி [illegible]ரு. எஸ். பி. பி. பட்டாபிராமராவ் கூறினர். இது கடற்கரை ஜில்லாக்களிலும், குறிப்பாக ஆந்திர தேசத்தின்மேல் [illegible]குதிகளிலும் கஷ்டம் இருப்பதாக அவர் கூறினர். இந்தப் [illegible]குதிகளில் விதைக்கப்பட்ட [illegible]விதைகளெல்லாம் தூர்ந்துவிட்டதாகவும் மழையின்மையால் விவசாயிகளின் வேலை தடைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர். அதிகமாக நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென [illegible] மக்கள் கோரியதாக அவ[illegible] கூறினர்.

ராயலசீமாவில் விரிவ[illegible] சுற்றுப்பிரயாணம் செய்[illegible] விட்டுத் திரும்பியுள்ள பஞ்ச[illegible] கமிஷனர் திரு. வி. எஸ்[illegible] ஹெஜ்மாடி, தென்மேற்கு பருவக்காற்று மழை பெய்[illegible]ததால் பஞ்ச நிலைமை சென்[illegible] 3 அல்லது 4 வாரங்களி[illegible] மேலும் மோசமடைந்திருப்பதாகக் குறிப்பிட்டார். அடுத்த பத்து, பதினைந்து நாட்கள் மழை பெய்தால் நிலைமை சிறிது மாறலாம் எனவும் அவர் கூறினர்.

இந்தப் பிரதேசத்தில் முங்காரிபயிர் (மழையை எதிர்பார்க்கும் பயிர்கள்) காய்ந்[illegible] விட்டன அல்லது காய்ந்[illegible] கொண்டிருக்கின்றன. அடு[illegible]

சில நாட்களில் மழை பெய்தால், சில மண பிரதேசங்களில் உணவு பயிர்களை விளைவிக்கலாம் என எதிர்பார்க்கின்றனர். நாலைந்து மாதங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட இப்போது தண்ணீர்ப் பஞ்சம் குறைந்திருக்கிறது. ஆனாலும் கூட சில இடங்களில் மக்கள் ஒன்று அல்லது இரண்டு குடம் தண்ணீருக்காக வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

போலீஸ் கமிஷனர் ஆபீஸ் முன் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

பம்பாய், செப் 25—

மத்திய பம்பாயில் ஒரு உல்லன் மில்லைச் சேர்ந்த 300 தொழிலாளிகள் இன்று பம்பாய் போலீஸ் கமிஷனர் ஆபீஸ் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். தொழிலாளிகளின் மீது செவ்வாய்க்கிழமையன்று போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்ததை விசாரிக்க வேண்டுமென்று அவர்கள் கோரினர்.

1951-ம் வருஷத்திய போனஸ் கொடுக்க வேண்டுமென்று இத்தொழிலாளிகள் மில்லில் உட்கார்ந்துகொண்டு வேலைநிறுத்தம் செய்தபோது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்து 15 பேருக்குக் காயம் உண்டுபண்ணியதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அறிவிப்பு

நாளை ஜனசக்தி அச்சகத்திற்கு விடுமுறையானதலால், சென்னை (27-9-52) வெளியூர் (28-9-52) தேதியிட்ட ஜனசக்தி வெளிவராது.

நிர்வாகி
'ஜனசக்தி'

49 சீன யுத்தக் கைதிகள் படுகாயம் அமெரிக்க வெறிச் செயல்

பான்முன்ஜாம் செப். 25—

சேஜு தீவிலுள்ள சீனத் தொண்டர் படை யுத்தக் கைதிகளை அமெரிக்க வெறியர்கள் சுப்பாக்கியால் சுட்டதில் 49 பேர்கள் படுகாயமடைந்திருக்கிறார்கள். தொடர்ந்து நடைபெறும் இந்த அக்கிரமங்களைக் கண்டித்து வடகொரிய தளபதி ஜெனரல் நாம் இல் அமெரிக்க தளபதிக்கு குறிப்பு அனுப்பியிருக்கிறார்.

தோழர்கள் சங்கரய்யா, நாகதாஸ் சொந்த ஜாமீனில் விடுதலை

நெல்லூர், செப். 25—

நெல்லூர் ஜில்லா, கொடவலூரில் கைது செய்யப்பட்ட தோழர் சங்கரய்யா எம்.எல்.ஏ மங்களகிரி நாகதாஸ் (எம்.பி) ஆகிய இருவரும் சர்க்காரிடமிருந்து வந்த உத்திரவின்படி சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் 144 தடையுத்திரவை மீறியதாக செப். 10ல் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

பல அதிகாரிகளுக்கு கல்தா

கெய்ரோ, செப் 26—

ஐந்து எகிப்திய ஸ்தானிகர்களும், மந்திரிகளும், இன்னும் பல சர்க்கார் பிரதம அதிகாரிகளும் இதுவரை பதவிகளிலி[illegible]து நீக்கப்பட்டுள்ள[illegible]ர்க்கார் இலாக்காக்க[illegible]லை ஒழிப்புக் கொள்[illegible]மாக அமுல் நட[illegible]ம்.

சோஷலிஸ்ட் - பிரஜா கலப்புக்கு இரு கட்சி நிர்வாகக்கமிட்டிகள் அங்கீகாரம்

சென்னை ஐ. ஜ. மு. தொடர்ந்து நீடிக்கும்

பம்பாய், செப். 26—

சோஷலிஸ்ட் - பிரஜா கட்சிகளின் கலப்புக்கு இரு கட்சிகளின் நிர்வாகக் கமிட்டிகளும் அங்கீகாரமளித்து விட்டன. சென்னையிலுள்ள ஐக்கிய ஜனநாயக முன்னணி, அது நிலைத்து நிற்கின்ற வரையிலும் இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்துள்ளனர்.

இந்திய சோஷலிஸ்ட் கட்சியின் தேசியப் பொதுக் கவுன்சில் [illegible] 66 ஓட்டுகள் பெற்று, பிரஜா-சோஷலிஸ்ட் கலப்பை அங்கீகரித்தது. [illegible] 4 பேர் ஓட்டளித்தனர். பிரஜா கட்சியின் நிர்வாகக்கமிட்டியும், கலப்புக்கு ஏகமனதான ஆதரவளித்தது.

சென்னையிலுள்ள ஐ. ஜ. மு. [illegible] விடுவார்கள் என்று சோஷலிஸ்ட் தலைவர் அசோக் மேத்தா கூறினர்.

"எவ்வளவு காலம் சாத்யமோ அதுவரை ஐ. ஜ. மு. நீடித்திருக்கும்" என்று பிரஜா கட்சித் தலைவர் கிருபளானி தெரிவித்தார்.

ஐ. ஜ. மு. இருப்பது பிரஜா—சோஷலிஸ்ட் கலப்பை எவ்விதத்திலும் பாதிக்காதென்று [illegible] மாகத் தெரிவித்தோம் என்று கிருபளானி மேலும் கூறினர்.

"புதிய கட்சியை "மக்கள் கட்சி" என்று பெயரிட வேண்டுமென்று பிரஜா கட்சி நிர்வாகக் கமிட்டியில் சில மெம்பர்கள் கூறினர். ஆனல் அப்பிரச்னையை நாங்கள் சோஷலிஸ்ட் கண்பர்களுக்கே விட்டு விட்டோம்" என்றார்.

ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், "என் கட்சியை சித்தாந்தங்களின் அடிப்படையில் நான் கட்சியில் சேர் [illegible] சமாதான பூர்வமான வழிகளில் [illegible] என்று நான் நம்புகிறேன். [illegible] மார்க்சீய லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டாலும் [illegible] என்று கிருபளானி பதிலளித்தார்.

சித்தாந்த அடிப்படையில் சிப்பலால்சாக்சேனு(பிரஜா) இந்தக் கலப்பை பலமாக எதிர்த்துள்ளதாகத் தெரிகிறது.

காங்கிரஸ் அக்கிரம ஆட்சிக்கெதிராக பலனுள்ள எதிர்ப்பைக் கொடுப்பதற்கு ஐ. ஜ.

(2-ம் பக்கம் பார்க்க)

ஜனசக்தி நிதி வசூல்

முன் வசூல்	1080-12-0
இன்றைய வசூல்	20- 6-0
மொத்தம்	1101- 2-0
குடியேற்றம், ராமலிங்கம் – வள்ளியம்மை வாழ்க்கை ஒப்பந்தம்	3-0-0
பாப்பு அம்மாள், சிங்கை	1-0-0
தமிழன்பர்	5-0-0
* சேலம் ஜில்லாக் கமிட்டி தோழர் சேதுராம் மூலம்	11-0-0
ஆக ரூ.	20 6 0

*சேலம்: எம்.ஏ. தனசேகரன் ரூ. 2, ஆர். வெங்கடாஜலம், பி. மாரிமுத்து, பாலசுப்ரமணியம், முத்துசாமி முதலியோர் தலா ஒரு ரூபாய்—கொண்டாலம்பட்டி: வெ. ராஜன் ரூ. 1-2-0, ஏ. பெருமாள், சு. சுப்ரமணி செட்டி, எம். ஸ்ரீனிவாசன் முதலியோர் தலா 8 அணு. காட்டூர்: கே. லட்சுமணன் ரூ. 1, ஏ. கிருஷ்ணன் 8 அணு, நாளிக்கல்பட்டி கே. கே. கருப்பண்ணன் ரூ. 1, சந்தியூர் கே. குருசாமி 8 அணு. (ம. ஆ. கமிஷன் போக மொத்தம் ரூ. 11-6-0)

நன்கொடை அனுப்பியவர்கள் அனைவருக்கும் நன்றி.

சௌ-என்-லாய்

பீகிங், செப். 25—

மக்கள் சீனப் பிரதமர் தோழர் சௌ-என்-லாய் மாஸ்கோவிலிருந்து பீகிங் திரும்பினர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது மகாநாட்டுக்கு பிரதிநிதிகள் தேர்தல்

ஸ்டாலினும், 11 பொலிட் பீரோ மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

மாஸ்கோ, செப் 25—

தோழர் ஸ்டாலினும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்-பீரோ அங்கத்தினர்கள் 11 பேரும், மாஸ்கோவில் அக்டோபர் 5-ந் தேதி ஆரம்பமாகவிருக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது மகாநாட்டுக்கு (காங்கிரஸ்) முதல் பிரதிநிதிகளாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை "பிராவ்தா" இன்று அறிவித்தது.

மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனத்தின பிரதேச மகாநாட்டில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் நிகிடா க்ருஷெவ் கட்சி வேலைகளைப் பற்றி ரிபோர்ட் சமர்ப்பித்தார். விவாதத்திற்குப்பின் தோழர் க்ருஷெவ மாஸ்கோ பிரதேச கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் க்ருஷெவ் பேசுகையில் "நண்பர்கள் என்ற அடிப்படையிலும், தனிப்பட்ட முறையில் விஸ்வாஸம், குடும்ப உறவினர்கள் என்ற அடிப்படைகளில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் மிகப்பெரிய தீமையை நாம் இன்னும் போக்கிவிடவில்லை என்றார்.

"அத்தகைய தலைவர்களை நாம் இன்னும் [illegible] வில்லை. அத்[illegible] கள் பதவிக[illegible] கங்களுக்கா[illegible] கொள்ளு[illegible] சே[illegible]

பிரிட்டனுக்கு சோவியத் தானியம்

லண்டன், செப். 25—

சோவியத் யூனியனிடமிருந்து அதிக அளவில் உணவு தானியங்களை இறக்குமதி செய்ய, பிரிட்டிஷ் உணவு மந்திரி காரியாலயம் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றன. இதற்காக இங்குள்ள சோவியத் வர்த்தக தூதுகோஷ்டியுடன் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

கம்யூனிட் கட்சியில் சேர இடதுசாரி சோஷலிஸ்ட் முடிவு

மக்களின் நல்வாழ்வுப் போராட்டத்தில் தலைமை தாங்கவல்லது கம்யூனிஸ்ட் கட்சியே

ஐ. ஜ. மு. வை பலப்படுத்தவேண்டும் அருணு ஆசப் அலி அறிவிப்பு

பம்பாய், செப். 25—

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒன்று சேர்ந்துவிட இடதுசாரி சோஷலிஸ்ட் குரூப் முடிவு செய்திருப்பதாக திருமதி. அருணு அசப் அலி கூறினர்.

இடதுசாரி சோஷலிஸ்ட் குரூப்பின் அமைப்புக் கமிட்டி இந்த முடிவு செய்திருப்பதாகவும், இத்தீர்மானத்தை டிசம்பர் 6, 7, தேதிகளில் நடைபெறும் குரூப்பின் கன்வென்ஷன் ஊர்ஜிதம் செய்யுமென்றும் கூறினர்.

பாடுபட்டுழைக்கும் மக்கள் உண்மையான சுதந்திரம்பெற்றுப் பயனடைய நம் நாட்டில் ஜனநாயகப்புரட்சிவெற்றி பெற வேண்டும். இத்தகையபுரட்சிக்காக முழுமூச்சுடன், உறுதியாகப் பணிபுரிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒன்று சேர்வது மிகவும் அவசியம் என்று பத்திரிகை நிருபர்களிடம் அருணு கூறினர்.

அடுத்த இரண்டு மாதங்களில் எல்லா ராஜ்ய, ஜில்லா கமிட்டிகளும் விசேஷக் கூட்டங்களைக் கூட்டி, இடதுசாரி சோஷலிஸ்ட் குரூப்பைக் கலைத்துவிட முடிவு செய்ய வேண்டுமென்றும், கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தினராகச் சேர விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் அமைப்புக் கமிட்டி தாக்கீது அனுப்பியுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின தலைமையின் கீழ் தான நம நாட்டில் மக்கள ஜனநாயக சர்க்காருக்கான போராட்டம தீவிரமாக நடைபெற முடியும் என்பதை நாட்டில் பல பாகங்களிலும் பிரம்மாண்டமான பொது கூட்டங்களைக் கூட்டி மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும என்றும் இடதுசாரி சோஷலிஸ்ட் குரூப்பின அமைப்புக் கூட்டம் தீர்மானித்துள்ளது.

நல் வாழ்வுக்கான போராட்டத்தில் [illegible]ம மக்கள் உறுதியுடன் [illegible]பட நம் நாட்டில் மிக[illegible]வுப [illegible]வாய்ந்த ஐக்கிய ஜன[illegible]ன்னணியைக் கட்டி

அமைக்க எல்லா இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களையும், ஊழியர்களையும் ஒன்று சேர்க்கும் பணியில் கம்யூனிஸ்ட் கட்சி முன் கையெடுத்துப் பணியாற்ற வேண்டுமென்றும் அழைப்பு கூட்டம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

"கம்யூனிஸ்ட் கட்சியின வேலைத் திட்டத்தில் தங்களுக்கு எத்தகைய கருத்து வேறுபாடும் இடையாது" என்று அருணு ஆசப் அலி ஒரு நிருபரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

'முல்கி' கிளர்ச்சி கண்டு நேரு சீறுகிறார்!

ஹைதராபாத், செப். 2[illegible]—

சமீபத்தில் நடந்த "முல்கி" கிளர்ச்சி பற்றி, பிரதமர் நேரு குறிப்பிடும்போது, கொஞ்சம் கூடமுறையில்லாத ஆவேசச் செயல் என்றும், திமிர் தாண்டவம் என்றும் இதை இயக்கிய மூளையையும், சூத்திரதாரிகளையும், ஞான சூன்யத்தையும் கண்டுதான மிகவும் வருந்துவதாக இன்று பேசுகையில் குறிப்பிட்டார்.

இங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்சினை, தனிப்பட்டதல்ல; அகில இந்திய பொருளாதாரப் பிரச்சினையில் ஒரு பகுதியென்றும், அதற்கு முறையாகப் பரிகாரம் காண வேண்டுமென்றும் கூறினர்.

சிறைசீர்திருத்தக்க[illegible]ட்டி சிபாரிசுகள்

கம்யூனிஸ்டு கைதிகளை தனி இடங்களில் வைக்க வேண்டுமாம்

சென்னை, செப். 24—

குற்றமும், குற்றவாளிகளும் எவ்விதம் நடத்தப்படவேண்டும் என்பது சம்பந்தமாக தோன்றியுள்ள புதிய கருத்துக்களுக்கு ஒப்ப இந்தியன் பீனல் கோடு திருத்திய[illegible] கப்பட வேண்டுமெ[illegible] சென்னை சர்க்காரால்[illegible] கப்பட்ட சிறை [illegible] கமிட்டி தன[illegible] டில் கூறி[illegible] ரான [illegible] திரு. கே[illegible]

குட்படவர்களை [illegible] அனுப்பக் கூடாது.

7. [illegible] மினல் [illegible]

16. சாட்டையடி அமுலிலிருக்க வேண்டும்.

17. சென்னை பெனிடென்ஷனரி சிறை சென்னைக்கு வெளிப் பகுதிக்கு 250-390 ஏக்கர் கொண்ட பிரதேசத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

18. சகல சிறைகளுக்கும் ஒவ்வொரு அறைகளுக்கும் மின்சார வசதி வேண்டும்.

19. ஸிவில் அஸிஸ்டெண்ட் [illegible]ர்ஜனின் சிறைத் தொண்டு [illegible]-லிருந்து 2 வருடமாக குறைக்கப்பட வேண்டும்.

20. சாதாரண சிறைகளுக்கு ஆண் நர்சுகளும், பெண் சிறைகளுக்கு பெண் நர்ஸ்களும் நியமிக்கப்பட [illegible]ண்டும்.

சகலவிதமான புதிய மருந்துகளும் சிறை ஆஸ்பத்திரி வசம் இருக்கவேண்டும்.

23. [illegible] தனி ஜெயில்களுக்கு [illegible] வேண்டியதில்லை, ஆனால் வேலைக்கரு[illegible]கள் [illegible] கொடுக்கப[illegible]

33. [illegible]

[illegible]ஜ.மு. தலைவர்கள் பேட்டி [illegible]ஜ்ய [illegible]க்கார் பாரபட்சம் [illegible]டியதாகப் புகார்

[illegible] 25— [illegible] மக்கள் ஐ[illegible] [illegible] தேசித்துள்ளது சரியல்ல [illegible] இவைகளை நடத்[illegible]தற்குத் தேவைப்படும் [illegible]க்குரிய வழிவகைகளையும் எடுத்துக் கூறினர்.

தெலிங்கானுவில் உப-தேர்தல்களின்போது சர்க்கார் அநுஷ்டி[illegible]த பாரபட்சமான போக்கை [illegible]ம்யூனிஸ்ட் தலைவர்கள் [illegible] எடுத்து விளக்கி[illegible]

சென்னை நகரசபை தேர்தல்:

சென்னையில் மேலும் 4 கூட்டணி அபேட்சகர்கள் வெற்றி

கோமளீஸ்வரன்பேட்டை காங்கிரஸ் அபேட்சகர் ஜாமீன் இழந்தார்

சென்னை, செப். 26—

சென்னை நகர மக்கள் கூட்டணியைச் சேர்ந்த தோழர் கே. விநாயகம் கோடம்பாக்கம் (35-வது) டிவிஷனில் வெற்றிபெற்றுள்ளார்.

31-வது டிவிஷன் கோமளீஸ்வரன் பேட்டையில் இன்றுவரை கவுன்சிலராக இருந்து வந்த காங்கிரஸ்காரர் எம். கே. நவநீதம் 918 ஓட்டுகள் பெற்று ஜாமீன் தொகையை இழந்தார். எதிர்த்து நின்ற சுயேச்சை அபேட்சகர் டி. வேணுகோபால் ராவ் 2283 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார்.

தேனம்பேட்டை, அடையார், சைதாப்பேட்டைகளிலும் 3 கூட்டணி அபேட்சகர்கள் வெற்றி.

விபரங்கள்

35. கோடம்பாக்கம்
கே. விநாயகம் (ந. ம. கூ.) 2587
ஆர். துரைசிங்கம் (கா) 1514
எஸ். அற்புதராஜ் (சு) 1190
வி. ஆர். குப்புசாமி (சு) 552
எ. எஸ். ஜேசுபாதம் (பிரஜா-சோ) 492
ஏ. ரங்கநாதன (சு) 409

46. தேனம்பேட்டை
டி. எம். ஷண்முகம் (ந. ம. கூ.) 2743
ஏகாம்பர நாயக்கர் (கா) 1986

48. சைதாப்பேட்டை
எம். கன்னியப்பன் (ந. ம கூ.) 4106
சபாபதி முதலியார் (காங்) 1944
ரத்னவேலு (சு.) 1666

50 அடையார்
இம்மானுவேல் ஆதிமூலம் (ந. ம. கூ.) 2567
கே. ஹன்ஸ்ராஜ் (காங்.) 1687
கிருஷ்ணன் (சு) 779

31. கோமளீஸ்வரன்பேட்டை
[illegible]. வேணுகோபால ராவ் (சு) 2983
[illegible]கே.எ[illegible] சம்புத் ([illegible]-பிரஜா) 1620
எ[illegible] நவநீதம் (காங்) 918
[illegible]ங்கடம் (சு) 680
[illegible] (சு) 506

[illegible]ம் பார்க்க

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை அரசியல் சட்டத்தின் மூலம் அது பரிபூர்ணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்."

ஜனசக்தி

வெள்ளிக்கிழமை 26-9-'52

பஞ்சப்பேயை விரட்ட வாரீர்!

இதுவரை ராயலசீமையில்தான் கடுமையான பஞ்சம் நிலவியது. குடிதண்ணீர் இல்லாதுகூட மக்கள் வாடினர். பலநாள் பட்டினியால் பச்சை மாமிசத்தையும் இலைகளையும் தழைகளையும், காய்ந்த கிளங்குகளையும் தின்றனர். அதனுல் நோய்நொடிகளுக் கிரையாகி பலநூறு மக்கள் மடிந்தனர்.

அன்று தாராபுரம்போன்ற தமிழ்நாட்டின் ஒருசில இடங்களில்தான் பஞ்சநிலைமை இருந்தது. ஆனுல் இன்று தென்னுட்டின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படும் தஞ்சை ஜில்லா உள்பட எல்லா ஜில்லாக்களிலும் கடுமையான தாதுவருஷப் பஞ்சம் அதன் கோரப் பற்களுடன் மக்கள்முன் பயங்கரக் காட்சி யளிக்கும் நிலைமை.

நிலத்திலிருந்து விரட்டப்பட்டதாலும், கைத்தறிபோன்ற தொழில்களிலிருந்தும் வேலையிழந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்ஊராக, குடும்பம் குடும்பமாகப் பிச்சையெடுக்கின்றனர். கண்ணகியின் கற்பைப்பற்றி பெருமைக்கொள்ளும் இந்த நாட்டில் வேலையிழந்த குடும்பப் பெண்கள் கற்பை விற்கின்றனர். அதிலும் வாழமுடியாது குடும்பம் குடும்பமாக தற்கொலைபுரிந்துவரும் கோர சம்பவங்கள் தினசரி வெளிவருவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

தொழில் வளர்ச்சிக்கான தகுந்த திட்டமிடுவதின்மூலமும், நிலச்சீர்திருத்தத்தின்மூலமும் அனைவருக்கும் வேலையும், வாங்குஞ்சக்தியையும் அளித்திருந்தால் இன்று மழை பெய்வதில் தடங்கல் ஏற்பட்டதை பெரிய அளவிற்கு சீமாளித்திருக்கமுடியும். ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களே இந்த உண்மையை ஒப்புக்கொள்கின்றனர். நாட்டில் உணவிருந்தும் அதை வாங்கி உண்ண மக்களுக்கு வகையில்லை என்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

ஆனுல் இந்த வாங்குஞ்சக்தியை மக்களுக்கு அளிப்பதற்கு ஆளும் வர்க்கத்தினிடம் எவ்விதத் திட்டமுமில்லை. மாருக, மக்களின் வாங்குஞ் சக்தியை மேலும்மேலும் உறுஞ்சி குடிக்கும் கொள்கையையே தொடர்ந்து கையாளுகின்றனர்.

பாடுபடும் விவசாயிகளுக்கு சொந்தமாக நிலமிருந்திருந்தால், பாடுபடும் விவசாயி நிலத்திலிருந்து விரட்டப்படுவதை தடுத்திருந்தால், இன்றுள்ள குளங்களையும் கண்மாய்களையும் கால்வாய்களையும் மராமத்து செய்திருந்தால் அரைகுறையாகப் பெய்த மழையைக் கொண்டாகிலும் ஒரு போகம் சாகுபடிசெய்து உணவு உற்பத்தி செய்திருப்பான் விவசாயி. இதைச் செய்யாததால் 100க்கு 80 சதவிகித விவசாய மக்களின் [illegible] இன்றைய பருவமழையில் ஏற்பட்ட தடங்கலும் சேர்ந்து இதுவரை நம் நாட்டில் காணாததொரு கோரமான பஞ்ச நிலைமை உண்டாக்கியுள்ளன.

யுத்தகாலத்திலும் அதற்குப் பின்னரும் காடுகளை அழித்து மரத்தைக் கரியாக்கி யுத்தகளைக்கும் தொழிற்சாலைகளுக்கும் பட்டணங்களிலுள்ள மற்ற காரியங்களுக்கும் உபயோகிக்க சர்க்கார் அனுமதித்துவந்ததால் பருவ மழைக்கு [illegible] பல காடுகள் மறைந்துவருகின்றன. அணைக்கட்டுகள்மூலம் போதிய மின்சாரத்தையும், தென் ஆர்காடு போன்ற இடங்களிலுள்ள நிலக்கரியையும் [illegible] தொழிற்சாலைகளுக்கு உபயோகப்படுத்தும் திட்டம் இன்றைய காங்கிரஸ் ஆட்சியாளரிடம் இல்லாததால்தான் மழை பெய்வதற்கு மிகமிக அவசியமான காடுகளை அழித்து கரி உற்பத்திசெய்யும் பெரும் ஆபத்தான நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

வறுமையினாலும் மழை இன்மையினாலும் ஏற்பட்டுள்ள இன்றைய பஞ்சத்தில் வாடும் மக்களுக்காக ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் கையாளும் பஞ்ச நிவாரணக் கொள்கை மனிதத் தன்மையற்றது படுமோசமானது என்பதை ராயலசீமையில் பார்க்கிறோம்.

கடுமையான பஞ்ச நிலைமையிலுள்ள தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, தஞ்சையின் தென் பகுதி ஆகிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலும் பட்டினி கிடக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்க கஞ்சித் தொட்டிகள் ஆரம்பிக்கவில்லை. மாருக பஞ்சத்திலிருக்கும் மக்களிடமிருந்து இன்றைய ஆட்சியாளர் தீர்வை வசூல் செய்து வருகிறது.

சர்க்கார் கையிலுள்ள தானியத்தைக்கூட சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யவில்லை என்பதைப்பற்றி பல நிரூபணங்களை ஜனசக்தி பிரசுரித்துள்ளதை அனைவரும் அறிவர்.

சர்க்கார் கையிலுள்ள செஞ்சோளம் சர்க்கார் நிர்ணயித்துள்ள படி விலை ரூ. 0-7-5ல் இன்று யாருக்கும் கிடைப்பதில்லை. காரணம் இந்த சோளத்தை [illegible] மூலம் அல்லது சர்க்காரின் மலிவு தானியக் கடைகள் மூலம் ஏழை மக்களுக்கு விற்காமல், சில தனிப்பட்ட கள்ள மார்க்கெட்காரர்களிடம் விநியோகத்திற்காகச் சோளத்தை சர்க்கார் கொடுத்துள்ளது. காங்கிரஸ் தலைவர்களின் உற்றார் உறவினர்களுக்கு விற்பனைக்காகக் கொடுத்துள்ளது. உதாரணமாக மதுரை ஜில்லா போர்டு தலைவரின் உறவினர் ஒருவருக்கு 10,000 மூட்டை சோளத்தை ஏழை மக்களுக்கு விநியோகம் செய்யக் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்விதத் தனி நபர்கள் ஒரு படிக்கு 3 அணு 4 அணு லாபம் வைத்து கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்விதம், மக்களின் உயிரைப் பணயமாக வைத்துச் சூதாடும் இன்றைய காங்கிரஸ் ஆட்சியின் [illegible]

பாரதியார் ஆவேசத்துடன் கூறியதுபோல,

"பஞ்சத்து நோய்களிலும் பாரதர் புழுக்கள்போல் துஞ்சத்தம் கண்ணால் கண்டும்"

நாம் சோம்பித் திரிவது நம் மக்களுக்கு இழைக்கும் பெருந் துரோகம். [illegible]

தேசபக்தியுள்ள, மனிதாபிமானமுள்ள, ஒவ்வொரு கட்சியும், [illegible] அரசியல் [illegible] பஞ்ச நிவாரணக் கமிட்டி அமைக்க முன்வரவேண்டுமென்று [illegible]

ஒவ்வொரு ஜில்லாவிலும் மக்கள் பஞ்ச நிவாரணக் கமிட்டி அமைத்து [illegible]

மக்கள் பஞ்ச [illegible]

விக்கிரமசிங்கபுரம்

பஞ்சாலைத் தொழிலாளர் சங்க 5வது ஆண்டு விழா

நெல்லை சதிவழக்கு தோழர்களை விடுதலை செய்யக் கோரிக்கை

சிங்கை, செப். 25—

21-9-52ம் தேதி பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின 5வது ஆண்டு விழா விக்கிரமசிங்கபுரம் எவரெஸ்ட் சினிமா கொட்டகையில் நடந்தது. தலைவர் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாததினுல் மேற்படி சங்க நிர்வாகிகளில் ஒருவரான இ. தளவாய் தலைமை வகித்தார். த. நா. தொ. சு. நிர்வாகக் கமிட்டி மெம்பரான தூத்துக்குடி தோழர் எஸ். எ. முருகானந்தம சங்கக் கொடியை ஏற்றி வைத்து கொடியேற்று விழாப் பிரசங்கம் செய்தார். அம்பை, கடையம் தொகுதி, எம்.எல்.ஏ. திரு. பாப்பாங்குளம் சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசினுர்கள்.

மகாநாட்டிற்குக் கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. மதுரைமத்திய சிறையிலுள்ள மதுரை மாரி – மணவாளன கேஸ் தோழர்கள், திருநெல்வேலி, ராமனுதபுரம் ஜில்லா சதிவழக்கில் தண்டிக்கப்பட்ட தோழர்கள், கொக்கிரகுளம் சப்-ஜெயிலிலிருந்து மீனுட்சி ஞதன், தூத்துக்குடி அருணுசலம்; கோயம்புத்தூர் மில தொழிலாளர் சங்கம், தெ.இ.ர. லேபர் யூனியன் திருநெல்வேலிக் கிளை, எஸ். சணமுகம பிள்ளை (முற்போக்கு எழுத்தாளர்) சிந்துபூந்துறை, தூத்துக்குடி மில் லேபர் யூனியன, சேனைத் தலைவர் மகாஜன சங்கம், சிங்கை.

திரு. சு. கந்தசாமி (தி.மு.க.) திரு. வெங்கடகிருஷ்ணன, தோழர் கார்மேகம் (மதுரை ப. தொ. சங்கத்தின் காரியதரிசி) தோழர் ஆறுமுகத்தேவர் கோடாரங்குளம் (அம்பை தாலூகா விவசாய சங்க ஆர்கனைசிங் கமிட்டியின சார்பாக) தோழர் எம். காமாட்சி (செங்கோட்டை ப. தொ. ச.), எம். கே. சாமி (சிங்கை வட்டார விவசாயிகள் சங்கம்), பழனிச்சாமி (அம்பை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம்), ஏ. எஸ். கந்தையா, ஐ. ஜ. மு. வாலிபர் சங்க ஆர்கனைசிங கமிட்டி, அம்பை. தோழர் எம். ஆர். வெங்கடராமன (கம்யூனிஸ்ட் கட்சி, திருநெல்வேலி ஜில்லா) நேரில் வாழ்த்துக் கூறினார்கள்.

பின்னர் சங்கக் காரியதரிசி தோழர் ஆர். வேலாயுதம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். அடுத்தபடியாக சென்னை திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. பி. எல். அட்வொகேட், தலைவராகவும், தோழர்கள்: ஆர். வேலாயுதம், ஆண்டி உபதலைவர்களாகவும், தோழர் ஏ. நல்லசிவன் பொதுக் காரியதரிசியாகவும், தோழர்கள் இ. தளவாய், வி. செல்லையா இருவரும் உபகாரியதரிசிகளாகவும், தோழர் எம். தர்மர் பொக்கிஷதாரராகவும், திருநெல்வேலி அட்வொகேட் என். டி. வானமாமலை சட்ட ஆலோசகராகவும் பி. ராமமூர்த்தி, எம். எல். ஏ. தொழிற்சங்க ஆலோசகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 14 நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அடுத்தபடியாக கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. தியாகிகளுக்கு வணக்கம், சேவிங்ஸ் பண்ட் முழுவதையும் கையில் கொடுக்க வேண்டும், பிராவிடெண்ட் பண்டை ஜ-லையிலிருந்து அமுல் நடத்தவேண்டும், 4 மாத போனஸ் வேண்டும், கொடுக்கப்பட்ட 3 மாத போனஸ் போகப் பாக்கியுள்ள ஒரு மாத போனஸ் தீபாவளி போனசாகக் கொடுக்கப்பட வேண்டும், 1949 மார்ச்சில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட 130 தொழிலாளிகளுக்கும், இதர காரணங்களால் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களுக்கும், பாதுகாப்புக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களுக்கும் [illegible] வில் சம்பந்தப் படு[illegible] விடுதலையான [illegible] களுக்கும் [illegible] விசாரிக்கப்படாமல் [illegible] நெல்லை [illegible] வாபஸ் வாங்க [illegible] அந்தக் கேஸில் [illegible]

கண்டிக்கிறது. இந்திய மண்ணில் கூர்க்கப் படைகளை திரட்டக்கூடாது. தஞ்சாவூர் ஜில்லாவில் அமுல் நடத்தப்பட்டுவரும் நிலவெளியேற்ற தடுப்பு சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி மாகாணம் பூராவும் குறிப்பாக உடனடியாக நெல்லை, ராமனுதபுரம் ஜில்லாவில் அமுல் நடத்த வேண்டும்.

ஐ. ஜ. முன்னணிக்கு ஆதரவளித்ததும், நவம்பர் 16ம் தேதி மதுரையில் கூடவிருக்கும் ப. தொ. மகாநாட்டில் டிபார்ட்மெண்டில் உள்ள குறைகள் பற்றியும் பீகிங் மகாநாட்டிற்குச் செல்ல ஆதித்தன, ராமமூர்த்தி முதலியவர்களுக்குப் பாஸ்போர்ட் கொடுக்க மறுத்ததைக் கண்டித்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் தோழர் ராமமூர்த்தி பேசுகையில் அடக்குமுறைக்குப் பின்னுல் மீண்டும் நீங்கள் ஒன்று திரண்டு வந்திருப்பதைக் கண்டு மனம் பூரிப்போடு வாழ்த்துக் கூறுகிறேன். பணக்காரரும், முதலாளிகளும் தங்கள் சதித் திட்டங்களை நிறைவேற்ற முயற்சிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிலாளிகள் அனைவரும், அரசியல் சங்க ஜாதி மத வித்தியாசமின்றி ஒன்றுபடாவிட்டால் நம்மை எதிர்நோக்கி நிற்கும் ஆபத்தைத் தடுக்க முடியாதென்றும், உடனடியாகச் சிங்கையிலுள்ள ப. தொ. சங்கத் தொழிலாளரும், பி.எல்.யூ. தொழிலாளரும் ஒன்றுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பின்னர் மகாநாட்டுப் பந்தலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு சந்தையை அடைந்தது. அங்கு தோழர் இ. தளவாய் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ராமமூர்த்தி சொற்பொழிவாற்றினர்.

"தலைமுறைகளாய் வாழும் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை மறுப்பது அழகல்ல"

பிரபல வழக்கறிஞர் பெரைரா வேண்டுகோள்

கொழும்பு, செப் 25—

ஓரியன்ட் கிளபபில் இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு அளித்த விருந்து ஒன்றில், இலங்கையில் பிரபல வழக்கறிஞர் ஆர். எல். பெரைரா (க்யூ. சி) பேசும்பொழுது, தலைமுறை தலைமுறைகளாக இலங்கையில் வாழ்ந்து வரும் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை வழங்க மறுப்பது அழகல்ல என்று எடுத்துக் கூறினர்.

சென்ற ஏப்ரலில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் இலங்கைவாழ் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை கேசரி சத்தியாக்கிரகம் தொடங்கியபோது, பிரஜா உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவு ஏற்படுத்த திரு. ஆர். எல். பெரைரா, பிரதமர் டட்லியை சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது.

திரு. ஆர். எல். பெரைராவுக்கு பதிலளிக்கும் முறையில் பிரதமர் டட்லி பேசும்போது, இங்குள்ள இந்தியர்கள் அனைவருக்கும் சர்க்கார் நீதி வழங்கும் என்று உறுதி கூறினர். மேலும் அவர் பேசும் போது, "இந்தியாவின மாபெரும் தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்றவர்கள ஆதர்சத்தினுல் தான எங்கள் அரசியல் சுதந்தரப் போராட்டத்திற்கு ஆக்கம் கிடைத்தது எனபதை இலங்கை என்றும் மறக்க முடியாது" என்று குறிப்பிட்டார்.

இலங்கை அரசியல் சட்டப்படி பிரஜா உரிமை யோக்கியதாம்சமுடைய இந்தியர்களுக்கு முறையே நியாயமான உரிமைகள் வழங்கப்படும் என்றும் பிரதமர் டட்லி கூறினர். இலங்கை ஜனத்தொகை அதிகரிப்பைக் கருதும்போது, இலங்கைவாழ் இந்தியர்களில் ஒரு பகுதிக்குத்தான் பிரஜா உரிமை அளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது சர்க்காருக்கு என்று வேறு சொல்லிவைத்தார்.

2 கல்லூரிகளுக்கு மான்ய நிறுத்தம்

உ. பி. சர்க்காரின் அக்கிரம முடிவு

பத்தேகார், செப். 25—

பருக்காபாத், கைம்கானிலுள்ள இரு கல்லூரிகளுக்கு மானயம் கொடுப்பதை உத்தர பிரதேச சர்க்கார் நிறுத்திவிட்டது. இரண்டு போலீஸ் அதிகாரிகளை மாணவர்களும், ஆசிரியர்களும் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு 4 மாணவர்களும், 2 ஆசிரியர்களும் 2 வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர்.

இதை எதிர்த்து மாணவர்கள் நியாயமான ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்ற வாரத்தில் ஐந்து நாட்கள் ஸ்ட்ரைக் செய்தனர். ஸ்ட்ரைக்கை மாணவர்கள் வாபஸ் வாங்கிவிட்டு பள்ளிகளுக்குத் திரும்பிய பின்னர், சர்க்கார் இத்தகைய அநியாய நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை ரத்துசெய்யப் போவதாக சர்க்கார் கடிதம் எழுதியுள்ளது.

டோக்கியோவில் அமெரிக்க சினிமாப் படத்துக்குத் தடை

டோக்கியோ, செப். 25—

ஸ்பென்சர் ட்ரேசி, வான் ஜான்சன் நடித்துள்ள "டோக்கியோமீது 30 விநாடிகள்" என்ற அமெரிக்க மெட்ரோ-கோல்ட்வின்-மேயர் கம்பனியின், 1943 ஏப்ரல் 18ல் ஜெனரல் ஜேம்ஸ் டூலிட்டில் தலைமையில் டோக்கியோவை அமெரிக்கர் தாக்கியதுபற்றிய சினிமாப்படம் காட்டப்படுவது நிறுத்தப்பட்டது.

இந்தப் படத்தைக் காட்டக்கூடாது என்று ஆட்சேபனைகள் கிளம்பியும், அதைப் புறக்கணித்து மெட்ரோ-கோல்ட்வின்—மேயர் கம்பெனியின் டோக்கியோ கிளை படம் காட்டுவதென்று முயன்றது. ஆனுல், இன்று சினிமா விமர்சகர்கள், பொது மக்களிடமிருந்து அலை அலையாகக் கண்டனக் குரல்கள் கிளம்பியதாலு, பொதுஜன ஆத்திரம் வளருமென்று கருதி படத்தைக் காட்டுவதில்லையென்று தடைப்படுத்தப்பட்டது.

சத்தியாக்கிரகம் செய்த அட்டி சுரங்கத் தொழிலாளர் தலைவர்கள் கைது

தொழிலாளர் ஒற்றுமையின்பேரில் தலைவர்கள் விடுதலை

ரெய்ச்சூர், செப். 23—

அட்டியிலுள்ள ஐதராபாத் தங்க சுரங்கத் தொழிலாளிகள் தங்களுடைய நியாயமான 16 கோரிக்கைகளை பெறுவதற்காக சத்தியாக்கிரகம் செய்து வருகிருர்கள்.

போலீசார் சுரங்க நிர்வாகத்திற்கு ஆதரவளிக்கும் முறையில் 20-9-52ல் சங்கத் தலைவர் தோழர் எஸ் கே. சர்மா, செயலாளர் தோழர் பி. என். நாராயணனையும் இன்னும் 2 கமிட்டி உறுப்பினர்களையும் கைது செய்துள்ளனர்.

இச் செய்தியைக் கேட்ட தொழிலாளிகள் திரளாகக் கூடி பொதுக்கூட்டம் போட்டு தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

பின்னர், சகல தொழிலாளிகளும் ஒன்றுசேர்ந்து போலீஸ் சூப்ரெண்டு காரை மறித்து, தடை செய்து தங்கள் தலைவர்களை விடுதலை செய்யும்படி கோரினர். அவர் தொழிலாளிகளின் கோரிக்கையை மறுக்க முடியாமல் "நீங்கள் சாவனி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்கு வாருங்கள்", என்று சொல்லிப் போனர். தொழிலாளிகளும், இதர தலைவர்களும் 12 மைல்கள் கால்நடையாகச் சென்று தங்கள் தலைவர்களை ஜாமீனில் விடுதலை செய்யும்படி செய்து அவர்களுடன வீடு திரும்பினர்.

"போலீஸ் அத்துமீறி நடந்தது உண்மையே"

தெலிங்கானு நிலைமைபற்றி பிரதமர் நேரு

ஐதராபாத், செப். 25—

இன்று இரவு பாத்தே மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசும்போது, தெலிங்கானு பற்றிக் கூறிய[illegible]

"மூன்று வ[illegible]லம் தெலிங்கானவி[illegible]தம் தாங்கிய பல[illegible]ர்ச்சி நடந்தது. [illegible]டில் இப்படி [illegible] மிக வும் கொடி[illegible] அது அடக்கப்ப[illegible]க்கும். ஆனுல் மத்திய [illegible]காரும், ராஜ்ய சர்க்காரும் மிகவும் நேர்மையாக இதில் நடந்திருக்கிருர்கள் என்று என்னுல் சொல்ல முடியும். அத்தோடு இங்கும் அங்கும் போலீஸ் அத்துமீறி நடந்துள்ளது என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன. போலீஸ் இலாகாவில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து [illegible]துகொள் ளும்படி கே[illegible] [illegible]றன" என[illegible]

"பல[illegible] விதக்[illegible] பிறகு[illegible] ஆயுதங்கள்[illegible]

கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். இது சிறுபிள்ளைத் தனமாகும். இவர்களோடு சமஅந்தஸ்தில் பேச்சுவார்த்தை நடத்த சர்க்கார் தயாராயில்லை" என்றும் சொன்னுர்.

"முன் காலத்தில் ராஜ்யங்களிலெல்லாம் போலீஸ் ராஜ்யங்களாகவே இருந்தன; சர்க்கார்களின் பிரதான வேலை சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதும், வரி வசூலிப்பதும தான். ஆனுல் இன்றிருப்பதோ நலஉரிமை பேணும் ராஜ்யங்கள்; அவைகள் மக்களின சமூக தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியுள்ளது" என்றும் கூறினுர்.

மத்ய சர்க்கார் [illegible]வீடுகட்[illegible]

1952-53-ல் ரூ. 7 கோடி

புதுடில்லி, செப். 21—

[illegible] தொழிற்சாலை தொழிலா[illegible] [illegible]டுத் தி[illegible]த்தின கீழ் [illegible] வ[illegible]த்திற்கு [illegible] வீடுக[illegible] இந்திய [illegible] ரூ. 1[illegible]2,500 [illegible] திட்ட[illegible] என[illegible] தொழி[illegible] இல்[illegible] வி[illegible] [illegible]க்கை ச[illegible]கிறது. [illegible]

சென்னை நகரசபை தேர்தல்

(முதற் பக்கத் தொடர்ச்சி)

[illegible]பி. பி. எஸ். மணியர் (சு, 380

[illegible]யாகராயநகர், வடக்கு
[illegible]சாமி
[illegible]பு[illegible]காங்) 1745
[illegible] 932
[illegible]பால்
[illegible] 77

ரஜனிகாந்த் மேத்தா (சு) 856
எ. ராமலிங்கம் செட்டி (சு) 733
ஷங்கர் தாக்கர் (சு) 731

43. மீர்சாகிப்பேட்டை
டாக்டர் எம். க. கரீம் (சு) 2812
முனவர் உசேன (கா) 2147
கூடூர் திருப்பாலு (சு) 577
கோபால் (சு) 653
பாலசுந்தர நாயக்கர் (பி-சோ) 720

47. தியாகராய நகர் (தெற்கு)
கே. எம். சுப்ரமண்யம் (சு) 3299
அண[illegible]கராச்சாரி (காங்) 2153
[illegible]க்கர் 484
[illegible]
[illegible] 322
(சு) 40
[illegible]ணி
[illegible]யகர்
[illegible]ன்

கொடை வள்ளல் தனம்

ஈகையில் பல தரங்கள் உண்டு. பிறருக்குத் தெரியாமல் கொடுப்பது, தெரிந்து கொடுப்பது, ஊரறிய நாடறிய பறைசாற்றிக் கொடுப்பது போன்ற பல ரகங்கள் உண்டு. "அம்மா பசிக்குதே! அய்யா பசிக்குதே!" என்று நம் வீட்டு வாசல் முன குரல் கொடுக்கிருர்களே! அவர்களுக்கு பரிந்து அன்னமிடும் நம் நாட்டு மக்களின் பரோபகார சிந்தனை உள்ளத்தைப்பற்றி இங்கு நான கூறவில்லை. நம் நாட்டு பாரி வள்ளலின் ஈகைக் குணத்தினின்று உதித்த தியாகக் குணத்தைப் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. மூன்ருவதாகச் சொன்ன ஈகை இருக்கிறதே! வெளித்தோற்றத்தில் ஈகையும் உள்ளத்தில் கொள்ளைத் தனமும் கொண்ட நம் நாட்டு நிலப் பிரபுக்களின, மன்னர்களின் கொடை வள்ளல் தனத்தைத் தான் குறிப்பிட விரும்புகிறேன.

ஆச்சார்யா வினோபாபாவே புது இயக்கம் ஒன்றை ஆரம்பித்து வைத்திருப்பதை அனைவரும் அறிவர். மன்னர்கள், நிலப்பிரபுக்கள் போன்ற தனது தேவையை விட அதிகமாக நிலம் வைத்திருப்போரிடமிருந்து "இனமாக" நிலத்தை வாங்கி நிலமில்லாத விவசாயிகளுக்கு இலவசமாக அளிப்பது ஆச்சார்ய வினோபாபாவேயின நோக்கம். இதற்காக ஒவ்வொரு ஊர் ஊராக, கால் நடையாகச் சென்று ஏழை மக்கள் சார்பில் நிலப் பிரபுக்களிடம் "தானம்" கேட்கிருர். இதற்குத்தான் பூமிதான யக்ஞம் என்று பெயர்.

ஹைதராபாத்ராஜ்யம் பூராவும் சுற்றி சென்ற ஒரு வருஷ காலமாக முப்பது ஆயிரம் ஏக்கர் தானமாக வாங்கி, நிலமில்லாத விவசாயிகள் சிலருக்கு அளித்துள்ளார். அவரது சொந்த இம் முயற்சி யாவராலும் பாராட்டக் கூடியதுதான். ஏழை மக்கள்பால் கொண்டுள்ள அவரது மனிதாபிமானம் யாவரின போற்றுதலுக் குரியதுதான். நம் நாட்டின ஏழ்மைக்குப் பிரதான காரணம் பல லட்சக் கணக்கான விவசாயிகள் சொந்த நிலமில்லாது தவிப்பது, நைஜாம்போன்ற மன்னர்களிடத்திலும், தியாகராஜமுதலியார் போன்ற ஒருசில நிலப் பிரபுக்கள் கையிலும் நிலம் குவிந்து கிடப்பது என்பதை ஓரளவு உணர்ந்துள்ளதையே ஆச்சாரியா ஆரம்பித்துள்ள இயக்கம் எடுத்துக் காட்டுகிறது.

வினோபா ஆச்சார்யாவின் நல்லெண்ணத்தில் யாருக்கும் சந்தேகமில்லை. அவருக்கு நிலம் கொடுத்தார்களே நைஜாம் போன்ற மன்னர்களும் நிலப் பிரபுக்களும்! இவர்களைப் பற்றித்தான் ஒன்றிரண்டு வார்த்தை சொல்லவேண்டியது மிக மிக அவசியமென நினைக்கிறேன்.

3600 ஏக்கர் நிலத்தை நைஜாம ஆச்சார்யாவுக்குத் தானமாகக் கொடுத்தாராம்! இன்னும் சில நிலப்பிரபுக்கள் நூறு, இருநூறு ஏக்கர் என்று தானஞ் செய்தார்களாம்! இதுமட்டுமல்ல பணங் காசு வேறு கொடுத்தார்களாம்! இவை எல்லாம ஆச்சார்யாவின் விருப்பப்படி ஏழை மக்களுக்குத் தானமாக வழங்குவதற்காக!

அம்மா தாயே என்று கேட்டவர்க்கு அன்னமிடும் தாய்மார்களின் ஈகையின் மேல் யாருக்கும் சந்தேக[illegible]மிருக்க முடியாது. ஆனுல் எச்[illegible]சிலகையால் கூட காக்காய் [illegible] விரட்டாதவர்கள் தானம் வழங்க வந்துவிட்டார்களென்ருல் அது பெரிய சந்தேகத்திற்கு [illegible]ரிய விஷயந் தான.

பத்து வருஷம் ரங்கூனில் பலபேரின தலை[illegible]யைத் தடவி, சம்பாதித்து, ரொ[illegible]ம்ப அதிகமாகவல்ல, கொஞ்சமாக. தம்பிடிக்குத் தம்பிடி மட்டும் [illegible] வட்டியாக வாங்கிசம்பாதித்து, பலர் நம் நாட்டில் குளம் வெட்டி, கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்வது வழக்கம். ரங்கூனில் பணத்தோட சேர்த்துச் சம்பாதித்த பாவங்களை இந்தியாவில் கும்பாபிஷேகம் பண்ணிக் கழுவி விடுவது இதன் நோக்கம். கும்பாபிஷேகத்திற்குச் செல்லும் ஜனங்கள் பேசிக்கொள்வார்கள்: அடடா அவரது தர்ம சிந்தனைக்கும், கடவுள் பக்திக்கும் ஓர் அளவுண்டோ என்று. கும்பாபிஷேகம் பண்ணும் பக்தசிகாமணியின் மூளை அந்த சமயத்தில் எதைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் தெரியுமோ? அடுத்த மாதம் காலாவதியாக இருக்கும் சுப்பனுடைய நோட்டை, பக்கத்து ஊர் அல்லது ரங்கூனிலுள்ள டிங்டானுடைய பிராமிசரி பத்திரத்தை கோர்ட்டில் தாக்கல் செய்து அவர்களது சொத்தைபபிடுங்குவது பற்றி எண்ணிக் கொண்டிருக்கும்.

மூவாயிரத்து ஆறுநூறு ஏக்கர் நிலத்தை நைஜாம்கொடுத்தது சும்மாவல்ல. ஒரு கோடி ரூபாய் மக்களுடைய வரிப் பணத்தை வருடாந்திர மான்யமாக வாங்கிக்கொள்கிருர். $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலம் வேறு வைத்துள்ளார். மக்களின கோபாவேச வெள்ளத்தில் மூழ்கித் திணறிக் கொண்டிருக்கும் நைஜாம் மூவாயிரம் ஏக்ரா நிலத்தைத் தானமாகக் கொடுத்து 'கும்பாபிஷேகம்' செய்து, மக்களைக் கொன்று குவித்த பாபத்தைக் கழுவிக் கொள்ள நினைக்கிருர். பாக்கியுள்ள அவர் நிலத்திற்கும் கொள்ளையடித்த சொத்திற்கும் காங்கிரஸ் பாதுகாப்புக் கிடைக்கும் என்ற எண்ணத்தால் செய்த ஈகை இது.

அதேபோல மக்களின வெறுப்புக்குள்ளான, ஹைதராபாத் நிலப்பிரபுக்களும் ஜாகிர்தார்களும் தங்களது பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைப் பாதுகாக்கவே நூறு, ஐம்பது ஏக்கர் நிலத்தை ஆச்சார்யாவுக்குத் தானமாகக்கொடுத்தனர். சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை; காரியத்திற்காகத் தான். தங்களது நிலப்பிரபுத்வக் கொள்ளையை மறைப்பதற்காகச் செய்யுந் தானம்" இது.

உண்மையில் இவர்களுக்கு தர்மசிந்தனை பரோபகார எண்ணம் இருக்குமானுல் தங்களது தேவைக்கும் போதிய நிலத்தை வைத்துக் கொண்டு பாக்கி[illegible]ள்ள ஏராளமான உபரி நிலத்[illegible]த இவர்கள் மக்களுக்கு தானமாக வழங்குவார்களா? அது இருக்கட்டும். அவர்களிடத்தில் தரிசாகக் கிடக்குதே நிலம், அதை யாவது விவசாயிகளுக்கு அளிப்பார்களா? நிலத்தை கூட இன்று கேட்கவில்லை. விவசாயிகளிடத்திலிருந்து வசூல் செய்யும் வாரம் குத்தகையை, வரியையாகிலும் குறைப்பார்களா?

அற்ப சொற்ப சில்லறை சீர்திருத்தத்தை எதிர்க்கிருர்களே! தஞ்சை வடபாதி மங்கலங்கள், குன்னியூர் அய்யர்கள், சாமியப்ப முதலியார்கள்! சங்கராச்சாரியார் திருவாடுதுறை திருப்பனந்தாள் பேர்வழிகள் ஆச்சார்யா வினோபா பாவே தென்னுட்டிற்கு வந்தால் என்ன செய்வார்களென்பது தெரியவில்லை.

60,000 ஏக்கர் [illegible] முள்ள திருவாடுது[illegible]றை ஆதீனம் ஆச்சார்ய[illegible] பூமிதான யக்ஞத்திற்கு [illegible] அல்லது 600 ஏக்கர் [illegible] கலாம். பனிரெண்டா[illegible] ஏக்கருள்ள வடபாதி [illegible] 120 ஏக்கர் கொடு[illegible] என்று நாம் நிச்சயமாக[illegible] லாம்! பரோபகாரி, [illegible] வள்ளல், தயாளன், [illegible] தனையாளன் என்ற பட்டம் வாங்க இந்தத் தியாகஞ் செய்யத்தயங்குவார்களா? கொடை வள்ளல் பட்டத்தை, 120 ஏக்கர் நிலத்தை விலையாகக் கொடுத்து வாங்கிருல் [illegible] ராஜாஜி போற்றுவார், புகழ்வார். இப்படிப்பட்ட [illegible]ர்ம சிந்தனையுடைய தீன [illegible]பாபரக் கொக்குகள் [illegible]டூழி வாழ்க என்று நம் கிராமணியார் தொண்டை [illegible]கிழியக் கத்துவார்! பாரி வள்ளலை தியாகராஜ முதலியாரின் வள்ளல்தனத்திற்கு உதாரணமாகக் காட்டுவார்.

இவ்விதம் நூறு ஏக்கர் நிலத்திற்குக் "கொடைவள்ளல்தனப் பட்டத்தை" விலைக்கு வாங்கி தியாகராஜ முதலியார்வாளின் நிலப்பிரபுத்துவம் காங்கிரஸ் பராமரிப்பில் நீடூழி வாழும்.

—கே. எம்.

நேற்றைய 'ஜனசக்தி' நிதி வசூல் விவரம்

(நேற்று வெளியிடப்பட்டுள்ள ஜனசக்தி நிதி நன்கொடையாளர்களின் முழு விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. —ஆ—ர்)

மேட்டூர் பிரதேசம்

கோனூர் குஞ்சாண்டியூர் மக்கள் கூட்டத்தில் பண முடிப்பு	14	4	0
மேட்டூர் பொது மக்கள்	273	5	9
பொதுக்கூட்ட வசூல்	12	11	0
தோழர் ஷண்முகம்	1	0	0
காசுமாலை மூலம்	1	14	6
தேர்தல் காலத்தில் சர்வ கட்சி கமிட்டி வசூல்	155	0	0
கொளத்தூர் பொது மக்கள்	55	0	0
கொளத்தூர் கிராமக் கூலித் தொழிலாளர்	5	2	0
மாரியப்பன்-பாப்பா திருமணம் (தேங்கல் வாரி)	1	0	0
மேட்டூர் திருவல்லிக் கேணி லாட்ஜ்	3	0	0
	522	5	3

(மேலே அறிவித்துள்ள மொத்த வசூலில் முதல் தவணையாக ஜனசக்திக்கு ரூ. 250 வந்திருக்கிறது).

வட மதுரை விவசாயிகள் சங்கம்

எம். ராமமூர்த்தி ரூ. 3
என். எஸ். ராஜன ரூ. 2

ரூ. 1 நன்கொடையாளர்

ஏ. வி. சாமிநாயுடு, பி. வேணுகோபால் நாயுடு, ஆர். கே. ஏ. கே. தங்கசாமிபிள்ளை, ரா. க. அ. இருளப்பபிள்ளை, ரா. பெரிய கருப்பநாடார், கருப்புசாமி, கே. குமாரு நாயர், சி. ரங்கசாமி நாடார், எம். எஸ். ராஜன். ஆர். ஆழ்வார்சாமி நாயுடு, வி. நாராயணசாமி நாயுடு, வி. ரங்கராஜு நாயுடு, விஸ்வநாதன்.

8 அணா நன்கொடை

எம். பி. சாமி, தே. என். ராமராஜ், எஸ். ராமலிங்கம், எஸ். இருங்காளி, ந. ராதாகிருஷ்ணன், சி. கோவிந்தசாமி அய்யங்கார், வெங்கடகிருஷ்ணன்.

4 அணா நன்கொடை

ஆர். பி. ராதாகிருஷ்ணன், ஏ. ராஜாமணி, கே. கோவிந்தராஜு, பி. பொன்னுச்சாமி, கே. வி. நாராயணசாமி நாயுடு, இ. சோணைமுத்துப பிள்ளை, ஏ. ஜே. கே. நாயுடு, ஆர். பொன்னுசாமி, ராமசாமி நாயுடு, என். வி. ராஜு, ராஜாராம செட்டியார், ஆ. கந்தசாமி, வி. கோவிந்தசாமி நாயுடு, காளிமுத்துப் பிள்ளை, ரா. கு. கோபால்கிருஷ்ணன் செட்டியார், வெ. அங்கமுத்து, சி. கு. தங்கவேல் நாடார்.

2 அணா நன்கொடை

பி. சுப்ரமணியன், எம். ஆறுமுக நாடார், கே. வி. பாலசுப்ரமணியன், எம். முத்துக் காமாட்சி, ஆ. கணபதி நாடார், வெ. மாரியப்ப நாடார், ஆவணமுத்து, நாகுசாமி நாயுடு.

மீனாட்சி 3 அணா, வெள்ளைச்சாமி நாடார் 1 அணா.

செங்கோட்டை

எம். அப்துல் ஜப்பார் ரூ. 2, டி. பழனி செட்டியார் 12 அணா.

ஒரு ரூபாய் நன்கொடை

பி. எம். சாமுவேல், எஸ். சுப்பையா பிள்ளை, டி. முத்தையா செட்டியார், கே. பெருமாள்.

... அணா நன்கொடை

எஸ். சினனக்கண்ணு செட்டியார், எல், சுப்பையா, எம். சங்கரநாராயண முதலியார், ஆ... டி. விநாயகம், ஆர். காளிமு... எம். மகாலிங்கம் செட்... லெ. கல்யாணி. எம். ...ர பிள்ளை, டி. முத்து ... எஸ். மாடசாமி மூப்பு... எஸ். அப்துல் அஜிஸ், பிச்சையாப் பிள்ளை, ...பி. செல்லையா செட்டி ... பாலசுப்ரமணியன் ... பி. அருணசலம் ... எஸ். பட்டு செட் ... ஸ். சணமுக மூப்ப... லவேசக்கோனர், ...ாமி மூப்பனர், ...மி நாடார், எம். ...ம்பியார், எஸ், ...பிள்ளை.

...நன்கொடை

...தீன், எஸ். ஈஸ் ... பிள்ளை, பி. ...தீஸ்வர மூப்பனர், கே. ...ஷ்ணசாமி மேஸ்திரியார், ... ராமய்யா செட்டியார், ... கோபிநாதன் நாயர், முத்... மேஸ்திரியார், டி. ...முகவேல் செட்டியார், ...ம். ஏ. ரக்மான எஸ். சண்முக... பி. வேலுசாமி மூப்பனர், ராமய்யா தேவர், கே. செல்லையா மூப்பனர்.

நடக்கவிருப்பவை

27-9-52 மாலை 3 மணிக்கு சென்னை! தென் தொழிலாளர் தொகுதி கூட்டு முன்னணி அபேட்சகர் தோழர் டி. எம். ராமசாமியை ஆதரித்து ஒரு சைக்கிள் ஊர்வலம் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை சாமி நாயக்கன் தெரு 48-வது நம்பரிலிருந்து புறப்படும். அனைவரும் தவருது கலந்து கொள்ளுமபடி கேட்டுக் கொள்ளப் படுகிருர்கள்.

மைசூர் ஜில்லாவிலும் பஞ்சம் பரவுகிறது

தக்க நிவாரணமளிக்க குருபாதசாமி வேண்டுகோள்

மைசூர், செப். 24—

மைசூர் பார்லிமெண்ட்மெம்பர் திரு. எம். எஸ். குருநாதசாமி மைசூர் ஜில்லாவில் நிலவி வரும் நிலைமையை நேரில் கண்டறிய சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திருப்பியதும், மைசூர் ஜில்லாப் பிரதேசங்களிலும் பஞ்ச நிலைமை ஏற்பட்டு வருகின்றது என்றும் அதையும் பஞ்சநிவாரணமளிக்க வேண்டிய பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று கூறினர்.

எலந்தூர், சமராஜநகர், டி. நரசப்பூரில் ஒரு பகுதியிலும் மழையில்லாமையால் பயிர்கள் கருகிவிட்டன, ஹுன்சூர், பெரியபட்ன ஆகிய உபரி பகுதிகளிலும் பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகையால் இந்த இடங்களில் உடனடியாக நிவாரண வேலைகள் தொடங்கியாக வேண்டும் என்ருர்.

மைசூர் ஜில்லாவில் கிணறுகளை ஆழமாகத் தோண்ட ஒதுக்கியுள்ள ரூ. 10 ஆயிரம் மானயம் போதாது என்ருர். அங்குள்ள பரிதாப நிலைமையை கவனிக்கும்போது, மைசூர் சட்டசபையில் 40 முதல் 50 ஆயிரம் ரூபாய் மானயம் ஒதுக்குவதாக சர்க்கார் கூறியதை ஞாபகப்படுத்தி, இந்தத் தொகையும் போதாதென்றும், குறைந்தது ஒரு லட்சமாவது ஒதுக்கினல்தான் உடனடியாக இந்தப் பகுதிகளில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்று எடுத்துக் காட்டினர்.

குண்டுலு பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிவாரண வேலைகள் போதாது என்ருர். சாமராஜ நகர் போன்ற இடங்களிலிருந்து மக்கள் குண்டுலு பேட்டைக்கு வந்து குடியேறுவதனல் அங்குள்ள நிவாரண வேலைகள் எல்லோருக்கும் போதவில்லை யென்றும் கூறினர்.

கால் நடை தீனி நிலை சற்று பரவாயில்லை யென்ருலும், கொள்ளேகாலம் போன்ற இடங்களிலிருந்து வந்து கால நடைத் - தீனியை வாங்கிக் கொண்டு ஜில்லாவுக்கு வெளியே கொண்டு போவதால், அதற்கு இங்கு தட்டுப்பாடு ஏற்படுமுன்னர் வெளியே போவதைத் தடுக்க வேண்டும் என்று கூறினர்.

ஜில்லா கலெக்டர்கள் மகாநாடு

ராயலசீமா பஞ்ச நிலைபற்றி விவாதம்

அனந்தபூர், செப். 24—

ராஜ்ய பஞ்சக் கமிஷனர் திரு. வி. எஸ். ஹெஜ்மாடி தலைமையில் ராயலசீமா ஜில்லாக் கலெக்டர்களின்மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அனந்தப்பூர், பெல்லாரி, சித்தூர், கர்னூல், கடப்பா, ஆகிய ஜில்லாக் கலெக்டர்கள் வந்திருந்தார்கள்,

4 மணி நேர விவாதத்தில், ஒவ்வொரு கலெக்டரும் தன்னுடைய பகுதியின் நிலைமை பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.

அனந்தப்பூர் ஜில்லாவில் 3 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு வந்துள்ள. திரு ஹெஜ்மாடி அந்தப் பகுதியில் நிலைமை மேலும் மோசமாகயிருப்பதாக அறிவித்தார். நிவாரண நடவடிக்கைகள் பஞ்சப் பிரதேசங்களில் நீடித்து நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விம்கோ தொழிலாளர் ஊர்வலம்

சென்னை, செப். 26—

23-9-52ல் விம்கோ தீக்குச்சி தொழிற்சாலை வெள்ளை நிர்வாகம் மேற்கண்ட தங்கள் கோரிக்கைகளை வழங்க வேண்டுமென்று கோரி தொழிலாளிகள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஊர்வலம் தொழிற்சாலையிலிருந்து புறப்பட்டு ... டத்தில் வந்து... யாகக் கலந்தது.

கே... க...

1. ... பளை... தெ... மாச...
2. ... பல... மு...
3. ... உயர...
4. ... குல...
5. ... வசதி... உயர்வு...
6. லா... கிராசுடி ... கொடு... டும்.
7. டி... வேலைக்கு வேண்டு...
8. ... கத்...

பஞ்சாயத்து போர்டு கணக்குகள் பரிசீலனை

வங்கனூர், செப். 22—

சித்தூர் ஜில்லா வங்கனூர் பஞ்சாயத்து போர்டு தலைவருக்கும் மெம்பர்களுக்கும் சலசலப்பு ஏற்பட்டதில் டி தலைவர்களுக்கு சரிவர கணக்குகளை மெம்பர்களுக்குக் காட்டாததால் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது விஷயமாக திருத்தணி டெபுடி பஞ்சாயத்து ஆபீசர் வங்கனூருக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினர்என்றுதெரிகிறது. சுமார் 2 வருஷத்துக்கு முன் பஜாரில் வசூலித்த சுங்கவரி வசூல்கள் கணக்கில் வரவு வைக்கவில்லை என்றும் இது விஷசமாக ஏலதாரர்களையும் அவர் விசாரித்ததாகவும்தெரிகிறது. (ந-நி)

தஞ்சை விவசாயிகளிடையே காங்கிரஸ் எம். பி. பிரசாரம்

அப்பன் குதிருக்குள் இல்லையாம்!

சீர்காழி, செப். 22—

இங்கிருந்து 2 மைல் தூரத்திலுள்ள எருக்கூர் கிராமத்தில் திரு ஆர். வெங்கட்ராமன் எம். பி. பேசுகையில் தேர்தல் காலத்தில் கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு விவசாயிக்கும் 5 ஏகரா பூமியும், ஒரு மாடும் தருவதாகக் கோஷித்ததாகவும், அது வெறும் தேர்தல் வாய்வீச்சு எனறும் கூறினர். இந்தியாவில் சாகுபடிசெய்யத் தக்கநிலம் மொத்தம் 20 கோடி ஏகராதான் உள்ளதென்றும், அதை 36 கோடி மக்களுக்கு பங்கிட்டால் ஒவ்வொருவருக்கும் ஒரு ஏகராவில் எட்டில் ஐந்து பங்குதான் கிடைக்குமென்றும், அதே போல இந்தியாவில் மொத்தம் 18 கோடி மாடுகள்தான் உள்ளனவென்றும் அவற்றை பங்கிட்டால் ஒவ்வொருவருக்கும் ஒரு மாட்டில் பாதிதான கிடைக்குமென்றும் பேசினர். (தேர்தலில் தோற்று ஓடிப்போன சந்தானம் அன்று வாந்தியெடுத்ததையே இவர் அப்படியே நக்கி விழுங்குகிருர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.)

கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு பெருகி வருவதைக் கண்டு பயந்து போய்த்தான சர்க்கார் அவசரச்சட்டம் கொண்டு வந்தது என்று நினைப்பது தப்பு என்று 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற வாறு பேசினர்.

6 2/3 ஏகராபூமியுள்ளபட்டாதார்களுக்கு அவசரச் சட்டத்தில் விதிவிலக்கு அளித்திருப்பதை நீக்கவேண்டுமென்கிற கோரிக்கையை அவர் எதிர்ப்பதாகக் கூறினர்.

நிலத்திருந்து வெளியேற்றப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 20,000 இருக்குமெனறும் இவர்களை கோர்ட்டுகளுக்கு இழுத்தடிக்காமலேயே நல்லமுறையில் மீண்டும் நிலத்திலிறங்க விடவேண்டுமென றும் அவர் பேசினர்.

வார, குத்தகை விவசாயிகளை மணைகட்டிலிருந்து வெளித்துரத்துவதைத் தடுக்கவேண்டும் என்றும், நிலச்சுவான் தார்களுக்கு விவசாயிகள் பட்டிருக்கும் கடனை ரத்துசெய்ய வேண்டுமென்றும், கன்சிலியேஷன் ஆபீசர் முன்பு மனுச் செய்து கொள்ளும் கெடுவை நீடிக்க வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்ற... பட்டன.

கேரள ...

நிவாரண...

... திரு...

தங்கச் சுரங்க பாறை வெடிப்பை ஆராய கமிட்டி

ராபர்ட்சன்பேட்டை, செப். 25—

தற்சமயம் சாம்பின ரீப் தங்க சுரங்க பாறை வெடிப்பு சம்பந்தமாக விசாரணை நடத்திக்கொண்டிருக்கும் கமிட்டியை ஆகஸ்டில் உரிகம் தங்க சுரங்க சம்பவத்தையும் விசாரணை செய்யும்படி இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா கேட்டுக்கொண்டுள்ளது என்று தெரிகிறது.

இந்த சம்பவத்தில் ஒரு சுரங்கத் தொழிலாளி கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

பாக். விமானம் நொறுங்கியது

லாகூர், செப். 25—

பாகிஸ்தான் விமானப்படையைச்சேர்ந்த ஒரு விமானம் லாகூருக்கு வடக்கே ஆறு மைல் தூரத்தில நேற்றிரவு விழுந்து நொறுங்கியது. 2 விமானிகளும் கொல்லப்பட்டனர்.

எண்ணைப் பிரச்னை

டெஹரான், செப் 25—

அமெரிக்க பிரிட்டிஷ் சர்க்கார்களுக்கு ஈரானியப் பிரதமர் முஸாதேக் விடுத்த மாற்றுப் பிரேரணைகளை எல்லாப் பத்திரிகைகளும் வரவேற்றுள்ளன.

திட்டமில்லாத மோசடிக்காரர்களை மண்கவ்வச் செய்யுங்கள்

தோழர் கே. டி. ராஜு, சம்பத் உரைகள்

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம்

நாகபுரி, செப். 25—

அக். 6, 7 தேதிகளில் காங்கிரஸ் காரியக் கமிட்டி புதுடில்லியில் கூடும். அப்பொழுது நிலச்சீர்திருத்தங்கள் பற்றியும், இன்னும் சில இதர விஷயங்கள் பற்றியும் காங்கிரசின் கருத்து முடிவுசெய்யப்படும் என்று காங்கிரசின் பொதுக் காரியதரிசி எஸ். என். அகர்வால் தெரிவித்தார்.

ஈரோடு, செப், 24—

நகர முனிசிபல் தேர்தலில் நகர மக்கள் கூட்டணி அபேட்சகர்களுக்காதரவாக சுமார் 200 பேர்களடங்கிய சைகிள் ஊர்வலம் ஒன்று 21-9-52-ல் நடைபெற்றது.

அன்று மாலை 4 மணிக்கு சங்கத்திடலில் இருந்து 1000 பேருக்கு மேற்பட்ட ஒரு ஊர்வலம் புறப்பட்டு நகரின முக்கிய தெருக்கள் வழியாக சுற்றி வந்து ஈ. வே. ரா. திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வந்து முடிவடைந்தது. தோழர் சவுரிமுத்து தலைமை வகித்தார். தோழர்கள் கே. டி. ராஜு, ஈ. வி. கே. சம்பத் ஆகியோர் பேசினர். சுமார் 9,000 மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசுகையில் காங்கிரசுக்கு ஒரு திட்டமுமில்லாமல் இன்று காந்தியின் பெயராலும், நேருவின் பெயராலும் ஓட்டுக் கேட்கும் மோசடியை அம்பலப்படுத்தினர். மக்களின் நலனைக் குறிக்கோளாகக்கொண்ட கூட்டணி அபேட்சகர்களுக்கே, "புலி"ப் பெட்டியில் ஓட்டளிக்குமாறு கேண்டுக் கொண்டார்.

தோழர் கே. டி. ராஜு பேசுகையில், நகரசபைத் தேர்தலில் உறவுமுறைகளையோ, ஜாதி, மதப் பிரச்னைகளையோ, ஓட்டுக்குப் பணம் கொடுப்பதையோ பொருட்படுத்தாமல், கூட்டணி அபேட்சகர்களையே வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். (ந-நி.)

ஆயிரம் விவசாயிகளின் பட்டினி ஊர்வலம்

கஞ்சித்தொட்டிகளையும், நியாயவிலைக் கடைகளையும் ஏற்படுத்துக !

நந்தியால் தாலூகா விவசாயிகள் கோரிக்கை

நந்தியால், செப். 21—

நந்தியால் தாலூகாவில் மழை தவறியதால் விவசாயிகள் கொடுந்துன்பம் அனுபவித்து வருவதைப்பற்றி ஆயிரம் விவசாயிகளைக் கொண்ட ஒரு பட்டினி ஊர்வலத்தை திரு. வெங்கடரெட்டியும், முனிசிபல் கவுன்சிலர் திருமதி பத்மாவதியம்மாளும் நடத்திச் சென்று டிபுடி கலெக்டரிடம் ஒரு மகஜரை... ர்ப்பித்தனர். விவ... படுகிற துன்பத்தை... அதிகாரிகளுக்கு ம... த்துக் காட்டுகிறது...

விவசாய... ருக்கு வேலை... காக நிவாரண ... மேற்கொள்ளப்பட ... டுமென்றும், கஞ்சித் தொட்டிகளும், நியாயவிலை கடைகளும் பாதிக்கப்பட்ட சகல கிராமங்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும் ம.க ஜர் கோருகிறது. இலவச மேய்ச்சல் உரிமை வேண்டுமென்றும், தக்காவிக் கடனும் ஜீவனோபாயக் கடனும் தாராளமா... கொடுக்க... வேண்டு...

மில்களில் மின்சாரக் குறைவால் வேலை நேரம் குறைக்கப்படுகிறது

சேலம், செப் 24—

மேட்டூர் நீர்த்தேக்க மட்டம் 53 அடியாக குறைந்துவிட்டபடியால் மேட்டூர் மில்லில் இன்று முதல் 1½ மணி நேரம் வேலை நேரம் குறைக்கப்பட்டுள்ளது. தினசரி காலை 7 முதல் 8-30 வரை மில் ஓடாமல் நிற்கும்.

இதேபோல சேலம் ராஜேந்திர ஜவாஹர் மில்களில் தொழிலாளிகளுக்கு முறையாக 'ஸ்டாப்' விடுமுறை விடப்பட்டு விடுவதாகவும் தெரிகிறது.

மின்சார உற்பத்தி குறைவின் காரணமாக கொளத்தூர் போன்ற சில கிராமங்களில் விவசாயத்திற்காக வைக்கப்பட்டுள்ள பம்ப் செட்டுகளுக்கு இரவில்தான தண்ணீர் இறைக்க மின்சாரம் தரப்படுகிறது. இதனாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பேச்சுவார்த்தைமூலம் தகராறை தீர்த்துக்கொள்ள முடியாது

இ. தே. தொ. ச. காங்கிரஸ் தமிழ்நாடு கிளையும் ஒப்புக்கொள்கிறது

...ாவை, செப் 23—

முதலாளிகளும் தொ... லாளிகளும் தங்க... ள் ஏ... படும் தகராறுகளை ... நுக்கொள்வது ... டாய விசா... மாயும் தொ... சுமூகமா... ஆ... மு...

தெ. இ. ர. லேபர் யூனியன் செலுத்திய ... தீர்ப்பு

மனு கொடுப்பதில் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகின்றனர்

கெடுவை நீடிக்க வேண்டும்

கும்பகோணம், செப். 24—

தஞ்சை ஜில்லா நில வெளியேற்றத் தடுப்பு அவசரச் சட்டத்தின்படி செப்டம்பர் 22-ந் தேதி விவசாயிகள் சமரஸ ஆபீஸரிடம் மனு சமர்ப்பிக்க கடைசி நாள் எனக் கருதி நூற்றுக் கணக்கான விவசாயிகள் சமரஸ ஆபீஸை அடைந்தனர்.

ஆனல், ஆபீஸர் காரியாலயத்தில் இல்லை. அவர் திருவிடைமருதூருக்கு முகாம் போயிருக்கிருர் என்று தெரிய வந்தது. ஆபீஸ் கிளார்க்குகளும் விவசாய மனுவை வாங்கவில்லை. விவசாயிகள் என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்றனர்.

இங்கிலையில் குடந்தை விவசாய சங்க தோழர் வி. ராமசாமி ஆபீஸில் சென்று விசாரித்தபொழுது "ஆபீஸர் தங்களை வாங்கும்படி கூறவில்லை" யென்றும், மனு கொடுக்க வேண்டுமானல் முகாமில் உள்ள ஆபீஸரை பார்த்து, அங்கு சென்றுக் கொடுக்கும்படி" தெரிவிக்கப்பட்டது.

பிறகு சமரஸக் கோர்ட் நீதிபதி பாஸ்கரத் தொண்டைமானை சந்தித்து கேட்டார். அவர் விவசாய மனுக்களை தம்மிடம் கொடுக்கும்படிச் சொல்லி, விவசாய மனுக்களை வாங்கிக் கொண்டார். பின் "கெஜட்" பத்திரிகையைப் பார்த்து "மனு கொடுக்க வேண்டிய நாள் ஆகஸ்ட் 23லிருந்து 30 நாட்கள், ஆகையால் செப்டம்பர் 21ந்தேதியுடன் முடிந்து போகிறது" எனக் கூறி மனுக்களைத் திரும்பிக் கொடுத்து விட்டார். மேலும் "விவசாயிகள் மனுக்களை தபாலில் போடுங்கள், பின் மறு உத்தரவு வந்தால், எடுத்துக் கொள்ளுகிருேம்" என்று கூறினர்.

இதற்குள் மணி 2 ஆகிவிட்டது. விவசாயிகள் மனுவை தபாலில் போட ஒவ்வொரு மனுவுக்கும் அநியாயமாக ரிஜிஸ்டர் செலவு 0-7-6 அணா தணடங்கொடுத்தனர்.

மேலும் விவசாய அவசரச் சட்டத்தைப்பற்றிய சர்க்காரின் சட்ட பிரதி இன்னும் சம்பந்தப்பட்ட சமரஸ அதிகாரிகளுக்கே கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. இதனனியில் நானகு நாட்களுக்கு முன்தான் இந்த மாதிரி மனு கொடுக்கவேண்டும் என்று மாதிரி மனுவை காண்பித்தனர். அவசரச் சட்டத்தை பற்றிய விஷயமே விவசாயிகளுக்குப் போய்சேரவில்லை. இப்பொழுதுதான கிராமங்களிலிருந்து நிலம் இழந்த விவசாயிகள் பத்தி பத்தியாக வந்துக்கொண்டு இருக்கின்றனர்.

ஆகவே, மேலும் மனு போடும் காலத்தை நீடிக்க வேண்டும். இன்னும் மனு போடவேண்டிய பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் இருக்கின்றனர். (ந. நி.)

நகர சபைத் தேர்தல்கள்

பழனியில் 9 கூட்டணி அபேட்சகர்கள் வெற்றி

பழனி, செப். 24—

பழனி நகர சபைத் தேர்தலில் கீழ்வரும் 9 கூட்டணி அபேட்சகர்கள் வெற்றி பெற்றுள்ளனர் :

1. ராமசாமி பிள்ளை, 2. எம். பி. மங்களக் கவுண்டர், 3. ஏ. சுப்பராய முதலியார், 4. மாரியப்பன், 5. முத்து தேவர், 6. பி. ஆறுமுகத் தேவர், 7. பெரியசாமி செட்டியார், 8. திருமதி லோகாம்பாள்.

தவிர 16 சுயேச்சை அபேட்சகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சோஷலிஸ்ட்-பிரஜா ...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

மு. தொடர்ந்து இருக்கவேண்டுமென்று திரு. டி. பிரகாசம் பலமாக வாதித்ததாகத் தெரிகிறது. டாக்டர் பி. ஸி. கோஸ்-ம் (வங்காளம்) கூட்டத்தில் கலந்து கொண்டார்.

சோஷலிஸ்ட் நிர்வாகக் கமிட்டியின் தீர்மானம்

சோஷலிஸ்ட் கட்சியின் ஜெனரல் கவுன்சில் செய்துள்ள தீர்மானத்தில், கடந்த மே மாதத்தில் பச்மார்ஹியில் நடைபெற்ற சோஷலிஸ்ட் கட்சியின் விசேஷ மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தின் அடிப்படையிலேயே தான் இந்தக் கலப்பு ஏற்படுத்தப் படுகிறது என்று கூறப்படுகிறது.

பிரஜா-சோஷலிஸ்ட் கலப்பைப்பற்றி இறுதியாக செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதற்கும், இரு கட்சிப் பிரதிநிதிகளின கூட்டுக் கூட்டத்தில் தற்காலிகத் தேசிய நிர்வாகக் கமிட்டியின் அமைப்பு, ஜெனரல் கவுன்சில் ராஜ்ய கமிட்டிகளின் அமைப்பு இவைபற்றியும் தீர்மானிக்க தேசிய நிர்வாகக்கமிட்டிக்கும், கீழ்க் காணப்படுவோர் அடங்கிய சப் கமிட்டிக்கும் அதிகாரமளித்தது. ஆச்சார்ய நரேந்திரதேவ, டாக்டர் லோஹியா, ஜயப்பிரகாஷ், அசோக்மேதா ஆகியோர் இந்த சப் கமிட்டி உறுப்பினர்கள்.

இந்த இரு கட்சிகளின்பிரதிநிதிகளடங்கிய கூட்டம் இன்று (26-9-52) ஆரம்பமாகியது. 3 நாட்கள் தொடர்ந்து நடக்கும். முதல் நாளன்று இருபளானி கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த முகுத்பிகாரிலால் இந்தக் கலப்பை சித்தாந்த ரீதியில் எதிர்க்கிருர் என்று தெரிகிறது. இக்கலப்பினல் அரசியல் சாதகங்கள் ஏற்பட்டாலும், இது சோஷலிஸ்ட் சித்தாந்தத்தையே சாரமற்ற தாக்கிவிடும், என்று அவர் அச்சப்படுகிருர். அதே மாதிரியே வங்கத்தைச் சேர்ந்த திருமதி ஷீலா பெரைராவும் இந்தக் கலப்பை எதிர்க்கிருர்.

இந்த எதிர்ப்புக்கு பதிலளிக்கையில் ஜெயப் பிரகாஷ், "சித்தாந்தம் என்பது அரசியல் நடவடிக்கைகள், மாறுதல்கள் என்ற பகைப்புலனில் வளர வேண்டியவைகள் தானே. சித்தாந்தத்திற்கும், பெரிய அரசியல் கடமைகளுக்கும் சம்மந்தமின்றி வேறுபடுத்தி வளர்க்கும் எந்த முயற்சியும், அந்த சித்தாந்தத்தையே சக்தியற்ற ஆயுதமாக்கிவிடும் என்ருர்.

திரிகம் தாஸின் வக்காபுத்தி

புருஷோத்தம் தாஸ் திரிகம் தாஸ்என்ற சோஷலிஸ்ட் தலைவர்தான, இரு கட்சிகளின் கலப்புக்குபினனும் பிரஜா கட்சியினர் கம்யூனிட் கட்சியுடன் தொடர்பை நீடிப்பது அனுமதிக்க முடியாது என்று கூறினாராம். ஐ. ஜ. மு. வை உடைத்தாக வேண்டுமென்று குரங்கு பிடியாய் பிடித்தாராம்.

மேத்தா ஆறுதல்

இரு கட்சிகளும இணைந்தாலும், சோஷலிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளும், திட்டங்களும் தொடர்ந்து இருந்து வரும் என்று, எதிர்ப்பவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

இரு கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டத்தில், ஐ. ஜ. மு. வை முறித்துவிட வேண்டுமென்று சில சோஷலிஸ்ட் மெம்பர்கள் வற்புறுத்த வேண்டுமென்று சோஷலிஸ்ட் ஜெனரல் கவுன்சிலில் சிலர் விடாப் பிடியாய் நின்ருர்களென்றும், பிறகு ஜெயப்பிரகாஷும், நரேந்திர தேவும் தலையிட்டு அவர்களை சமாதானப்படுத்ருர்களென்றும் தெரிகிறது.

திரு. ஆதித்தன் அறிக்கை பற்றி கிருபளானி

தமிழ்நாடு பிரஜா கட்சித் தலைவர் திரு. ஆதித்தன் வெளியிட்டுள்ள அறிக்கையைப்பற்றி ஒரு நிருபர் கிருபளானியைக் கேட்டபோது, "சென்னையில் ஐ. ஜ. மு. பிரச்சினைபற்றி ஆதித்தன முன்னுக்குப்பின் முரணன அறிக்கைகளை விடுகிருரென்றும், பிரஜா கட்சியின் கொள்கைகளையும், திட்டங்களையும் பின்ற... வரையில், அவர் பிரஜா கட்... மெம்பர் தானென்றும்" கூறினர்.

இன்றைய இரு கட்சிப் பிரதிகள் கூட்டத்தின ... நிரு...ல் புதிய ... அங்கத்தி...ர் ... சட்ட திட்டங்கள், ... செக்ரடேரியட், பார்லிமெண்டரிபோர்டு, தேசிய ... தாட்டின தேதி, இடம், ... இபக்கத்தைக் ... வது ... ர கட்சிகள் பற்... ... ரத் சேவாக் ... கொள் ... ந்தைப ... கட்சியின ...

தங்கம், வெள்ளி

பம்பாய், செப். 26—

(பகல் 2 மணி)

பவுன்	6-8-0
தங்கம்	89/1-88/8
வெள்ளி	158/10
ஆரம்ப விலை	
தங்கம்	89/8-88/14-88/15
வெள்ளி	158/14-158/15
கல்கத்தா	
பவுன்	61/12
தங்கம்	90/12-90/8
வெள்ளி	159/2; 159/6 159/2

சென்னையில் சினிமா

சென்னை, செப். 26—

கல்யாணம்	—	காசினோ,
பண்ணிப்பார்	—	பிராட்வே
ஜமீன்தார்	—	கெயிட்டி,
		பாரத்,
ஆன்	—	கிருஷ்ணா,
		சித்ரா, சயானி
அம்மா	—	கபாலி
பாதாள பைரவி	—	சன
மந்திரி குமாரி	—	கினிமா
		சென்ட்ரல்
தேவகி	—	பாரகன
நல்லதம்பி	—	சரஸ்வதி
மாயா ரம்பா (தெலுங்கு)	...	கிரௌன்
ஹிந்தி		
பர்ச்செய்ன்	—	பிரபாத்
பூனம்	—	வெலிங்டன்
நீலம்பரி	—	அசோக்
ராக்ராங்	—	ஸ்டார்
பர்சாத்	—	லட்சுமி (அமிஞ்சிக்கரை)
ஜால்	—	ராஜகுமாரி
கஜானு	—	செலக்ட்
ஆவாரா	—	மஹாராணி

காரைக்குடி நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் ஜனநாயகம் !

காரைக்குடி, செப். 23—

காரைக்குடி நகரசபைத் தேர்தலில் மக்களின் ஆதரவை பூர்ணமாக இழந்து நின்ற காங்கிரஸ்காரர்கள், தேர்தலில் ஜெயிப்பதற்கு மிகவும் கேவலமான முறைகளைக் கையாண்டார்கள். ஜாதி வெறியை முடிந்த மட்டும் கிளப்பிவிட்டார்கள். காங்கிரசிற்கு எதிராக ஓட்டுப்போட்டால் கம்யூனிஸ்டுகளாக கருதப்படுவார்கள் என்று மக்களை பயமுறுத்தினர்கள். இவை அனைத்தும் மக்களிடம் எடுபடாமல் போகவே தேர்தல் நடந்த 16ந்தேதி பிற்பகல் 3 வது வார்டு, 10வது வார்டு, 11வது வார்டு இவைகளில் காங்கிரஸ் முறியடிக்கப்பட்டு விடும் என்று அஞ்சிய காங்கிரஸ்காரர்கள், தங்களது பலம் அத்தனையும் பிரயோகித்து பொய் ஓட்டுகளையும் செத்த ஓட்டுகளையும் சேகரிக்க ஆரம்பித்தார்கள். அதையும் நம்பாமல் ஓட்டுச் சீட்டுகளைத் தங்களிடம் கொண்டுவந்துகொடுப்பவர்களுக்கு ரூ, 5 முதல் 10 வரை கொடுத்து ஓட்டுகளைச் சேகரித்து தங்களுக்கு வேண்டியவர்களிடம் கொடுத்து மொத்தமாகப் போடச் செய்தார்கள். அதனால்தான் மக்களின் பூரண ஆதரவைப் பெற்று நின்ற டாக்டர் எம். எஸ். முத்தையா, தோழர் கே. கன்னையா, டாக்டர் உதயசிங், கருப்பன் செட்டியார் ஆகியோர்களைத் தோற்கடிக்க மிகவும் கேடுகெட்ட முறைகளையெல்லாம் கையாண்டும் 18 ஓட்டு வித்தியாசத்திலும், 40 ஓட்டுவித்தியாசத்திலும் தான் அவர்கள் வெற்றிபெற முடிந்தது. காந்தி வழி வந்த இந்த சத்திய சந்தர்களின் செய்கையை பூர்ணமாக மக்கள் இந்தத் தேர்தலில் நன்கு கண்டறிந்து கொண்டார்கள். (ந-நி)

(முதற் பக்கத் தொடர்ச்சி)

விளங்கவேண்டும்கண்ணனூர் கயிறு தொழில் விஸ்தரிக்கப் படவேண்டும். கோவை, வேலூர், பெல்லாரி தொழில் யந்திரங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

30. 500 பேர்களுக்கு 1000 ஏக்கர் வீதம்சிறைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கமிட்டி உறுப்பினரில் ஒருவரான கைதிகள் அப்பண்ணைகளில் தங்கள் மனைவிகளுடன் வசிக்க வசதிசெய்யப் படவேண்டும் எனபது கமிட்டியில் நிராகரிக்கப்பட்டது.

31. விடுதலையடைந்த கைதிகள் உதவிசங்கம் நல்லமுறை, நிறைய பணவசதியுடன் அமைக்கப்பட வேண்டும்.

32. முக்கியமான காரணங்களுக்காக உதாரணமாக குடும்பத்தில் இறப்பு, கல்யாணம், கொடும் நோய் சமயங்களில் கைதிகளுக்கு 'பரோல்' கொடுக்கப்பட வேண்டும். போக வரவுசெலவு சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

33. சப்-ஜெயில்கள், முதலியவை ஸ்தல வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் சிறை இலாகாவின் கீழ் ... வேண்டும். ...ல்' பள்ளிகள் ... ற்றமளிக்கக் ... ள்ள மாண ... தொழில்கள் ... பட வேண் ...

இராமநாதபுரம் சதிவழக்குத் தோழர்கள் ஜாமீனில் விடுதலை

மதுரை சிறையில் தோழர்கள் படும் அல்லல்

மதுரை, செப். 23—

இராமநாதபுரம் சதிவழக்கில் தண்டிக்கப்பட்ட தோழர்களில் 20 பேர் இன்று ஹைகோர்ட் தீர்ப்புப்படி ஜாமீனில் விடுதலை பெற்று வெளியே வந்துள்ளனர். இவ்வழக்கில் தண்டிக்கப்பட்ட தோழர்களில் இருபத்தூர் தோழர் ஷண்முகம்—கிருங்காக்கோட்டை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாலும், தோழர் திருவேங்கிடத்தேவர்—தர்மராஜ் தோப்பு கேசில் தண்டிக்கப்பட்டிருப்பதாலும் ஜாமீனில் வெளிவரவில்லை. தோழர் கே. தங்கச்சாமியும், கிருங்காக்கோட்டை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதால் மதுரை சிறையில் இன்னும் அடைபட்டுக்கிடக்கின்றனர்.

திருநெல்வேலி சதிவழக்கில் தண்டிக்கப்பட்ட 16 தோழர்களும் (பொன்னு, ஆர். கிருஷ்ணன், மாயாண்டி பாரதி, முனுசாமி, ஏ. ராமச்சந்திரன், டி. பி. ராமலிங்கம், பி. மாணிக்கம், வேலுச்சாமித்தேவர், ஆர். வி. அனந்தகிருஷ்ணன், கே. பி. எஸ். மணி, பி. சொர்ணம், ஆர். பெருமாள், ஆர். நல்லதம்பி, கே. அண்ணாமலை, வி. அழகுமுத்து, ஏ. வேலாயுதம்), மதுரை வழக்குகளில் தண்டிக்கப்பட்டிருக்கும் 4 தோழர்களும் (கே. கோவிந்தன, பி. முத்தையா, முத்துப்பிள்ளை, பி. கருப்பையா) மேலேகூறிய இருபத்தூர் தோழர்கள் 3 பேரும் மதுரை சிறையில் இருக்கின்றனர்.

சிறையில் காலை $7\frac{1}{2}$ மணி முதல் $11\frac{1}{2}$ மணி வரையும், பகல் $1\frac{1}{2}$ மணிமுதல் $4\frac{1}{2}$ மணி வரையும் வேலை வாங்கப்பட்டு வருவதைப்பற்றி தோழர்கள் பலதடவை சர்க்காருக்கு எழுதியும் இதுவரை கவனிக்கப்படவில்லை. முதல் வகுப்புக் கைதிகளாக நடத்தப்பட்ட தோழர்களுக்கு இதுவரை பீடி, சுருட்டு வாங்கிக்கொள்ள இருந்த உரிமை ஒரு வாரத்துக்கு முன் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டில், முதலியவைகளும் எடுக்கப்பட்டு விட்டதாம்.

திருநெல்வேலித் தோழர்கள் அனைவருக்கும் 2 வது வகுப்பே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தோழர்களில் பலர் விசாரணையிலிருந்த போது முதல் வகுப்புக் கைதியாக நடத்தப்பட்டு வந்தும், இன்று அவர்கள் 2 வது வகுப்புக் கைதிகளாக நடத்தப்படுகின்றனர். இதுசம்பந்தமாக கலக்டருக்கு தோழர்கள் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

ஜாமீனில் வெளிவந்த தோழர்கள் 20 பேரும (பி. ராமச்சந்திரன், எம். சிவனாண்டி, ஏ. வெங்கடசாமி, எம். நடராஜன், குப்பையாண்டி, சுப்பையாத்தேவர், அனுமந்தராய பிள்ளை, சுப்பையா பண்டாரம், சின்னச்சுந்தரம், சக்திவேலுச் செட்டியார், சக்திவேலுத் தேவர், லிங்கசாமி, கோபால்சாமி, எம். வி. சுந்தரம், ஏ. ராமசாமி, வி. ராமசாமி, எம். இருஷ்ணன், அழகப்பா, கே. கே. பெருமாள், ஆசீர்வாதம்) மிகவும் இளைத்திருக்கின்றனர். ஆனால் மக்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுப் பணிபுரிய உற்சாகம் மிகுந்து காணப்படுகின்றனர்!

அவர்கள் எல்லாம் மக்கள் சேவையில் புடம் போட்டெடுக்கப்பட்ட மங்காத மாணிக்கங்களல்லவா! (ந-கி.)

குறைந்த விலைக்கு உணவு கிடைக்க உத்திரவிடுக!

மைசூர், செப் 25—

மைசூர் நகர ரேஷன் கார்டு உள்ளோர் சங்கத்தின் சார்பில் செம்டம்பர் 20ல் டவுன் ஹால் மைதானத்தில், டாக்டர் எம். அன்னஜப்பா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், மக்களின் வாங்கும் சக்தி குறைந்துவிட்டதை முன்னிட்டு, உணவு விலையையும் குறைக்க உத்திரவிடும்படி சர்க்காரைக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உணவு தான்யங்களை உடனுக்குடன் எற்றிக்கொண்டு வருவதற்கு வாகன் வசதிகள் செய்துகொடுக்கும்படி மத்திய சர்க்காரை மைசூர் சர்க்கார் கேட்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தில் ஜே. சுவாமிதாஸ், எம். ஆர். சி. பசப்பா, சந்திரசேகரஜாய்ஸ், கோதண்டராம பிள்ளை, லோகசேவ கிராத [illegible] என். கிருஷ்ணய்யா செ[illegible]

பதவி வேட்டைக்காரர்களை விரட்டியடியுங்கள்

செங்கோட்டை நகர மக்கள் கூட்டணி தலைவர் அறிக்கை

செங்கோட்டை, செப். 23—

செங்கோட்டை நகர மக்கள் கூட்டு முன்னணித் தலைவர் தோழர் ஏ. சீனிவாசன மக்களுக்கு தெரிவிக்கும் ஓர் வேண்டுகோள்:—

இன்னும் சில நாட்களில் செங்கோட்டை நகர சபைத் தேர்தல் நடைபெறப் போகிறது. தேர்தல் தருணத்தில் பதவி வேட்டையாளர்கள் மாய்ந்து மடிந்து போன, பிற்போக்கு சக்தி வாய்ந்த முதலாளி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்களின் பெயர் சொல்லி; பொது மக்களை தங்களது சுயநலத்திற்காக ஏமாற்றி சூழ்ச்சிசெய்ய மக்கள் முன்பு வருவார்கள். முற்போக்கு சக்திகளேயும், ஏழை மக்களேயும், சாதாரண மக்களேயும், முன்னேற்ற மடைவதை தடுத்துநிறுத்துவதே இவர்களின் சூழ்ச்சி. ஆகையால் சாதாரண மக்களும், ஏழை மக்களும் இந்த முதலாளி தத்துவ பதவிவேட்டையாளர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கும் தருணம் வந்துவிட்டது. நகரமக்கள் முன்னேற்றத்திற்காகவே பல முற்போக்கு கட்சிகள் என்று சேர்ந்து நகர மக்கள் கூட்டு முன்னணி அமைக்கப்பட்டிருக்கிறது. முதலாளி தத்துவமானது, காங்கிரஸ் என்றும், தமிழ்நாடு காங்கிரஸ் என்றும், இன்னும் பதவி வேட்டைக்காக பல பெயர் சொல்லியும் மக்கள் முன்பு வரலாம். ஆதலால் பொது மக்கள் இந்த முதலாளித்துவத்திற்கு இடம் கொடுக்காமலும்; எந்தவிதமான அரசியல் கொள்கையும் நோக்கமும் இல்லாது தமது குடும்பச் சண்டைகளின் காரணமாக பொதுமக்களை ஏமாற்றி பிழவுபடுத்தி பதவி வேட்டையாடி எந்த ஸ்தாபனமும் எந்த பதவியும் எங்கள் குடும்பத்திற்கு தான சொந்தம் என்று கூறக்கூடிய வர்க்கங்களுக்கு இடம் கொடுக்காமலும், மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு நகர மக்கள் கூட்டு முன்னணியை ஆதரித்து சாதாரண மக்களை நகர சபைக்கு அனுப்பி ஏழை மக்களுக்கும் நகரத்திற்கும் நன்மை செய்யும் நிலையில் ஒத்துழைக்கும்படியான எல்லா மக்களையும் வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளப்படுகிறது.

கூட்டணிக்கே ஓட்டளியுங்கள்

"உணர்ச்சி" வார இதழ் ஆசிரியர் வேண்டுகோள்

ஈரோடு, செப் 23—

ஈரோட்டிலிருந்து வெளியாகும் "உணர்ச்சி" என்னும் வார இதழின் ஆசிரியர் கு. சேதுராமன நகரசபைத் தேர்தல்களில் ஓட்டளிக்க வேண்டுமென்று கூறியுள்ளார், அதில் அவர்.

"வரம்போகும் நகரசபைத் தேர்தலில் முற்போக்கு ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டு இயங்கும் நகர மக்கள் கூட்டணி அபேட்சகர்களுக்கு உங்கள் பொன்னான வாக்குகளைப் போட்டு, ஆச்சாரியாரின் சூழ்ச்சிக்கும், ஜன விரோத ஆட்சிக்கும் முடிவுகட்ட வேண்டும். ஆச்சாரியார் மக்கள் தீர்ப்பைப் பரீட்சித்துப் பார்க்கட்டும்.

ஜாதி, சமய, வேற்றுமைகளைக் காட்டாது, நகர மக்கள் அனைவரும் திரண்டு நகரமக்கள் கூட்டணி அபேட்சகர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்".

லாயல் மில் தொழிலாளர் வெற்றி

கோவில்பட்டி, [illegible] 24

லாயல் டெக்ஸ்டைல் [illegible] தொழிலாளர்கள் 19-9-[illegible] ஐக்கியப் போராட்ட[illegible] வெற்றியடை[illegible]

[illegible] தொழிலாளர்[illegible] கையான 3 மாத இ[illegible] தீபாவளி போனஸ் [illegible] கையின் விளைவாக, மில் நி[illegible] கம் 1951-52க்கு [illegible] போனஸ் 3-10-52ல் [illegible] பதாக போர்டு [illegible] றது. ஆலை[illegible] லாளிகளு[illegible] கத்தா[illegible]

"ஐ. ஜ. மு.—பிரஜா-சோஷலிஸ்ட் உறவுபற்றி விவாதிக்க பம்பாய் செல்கிறேன்"

தோழர் எஸ். பி. ஆதித்தன் அறிக்கை

சென்னை, செப். 25—

ஐக்கிய ஜனநாயக முன்னணியின் பொதுக்காரியதரிசி தோழர் எஸ். பி. ஆதித்தன் பத்திரிகைகளுக்குப் பின் வரும் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"பிரஜா—சோஷலிஸ்ட் கலப்பு இப்பொழுது முடிந்துவிட்ட ஒரு விஷயமாகையால், ஐக்ய ஜனநாயக முன்னணியுடன் அந்தப் புதிய கட்சியின் உறவு சம்பந்தப்பட்ட பிரச்னை, பரிகாரம் தேடப்பட வேண்டிய ஒரு அவசரப் பிரச்னையாகிவிட்டது. முன்பு சோஷலிஸ்ட்கள் மாத்திரம் அனுஷ்டித்து வந்த கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கொள்கை இப்பொழுது பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியின கொள்கையாகிவிட்டது.

ஆகவே காங்கிரஸ் மைனாரிட்டியாயுள்ள சென்னையில், இக்கட்சி செயல்படும் பிரச்னை எழுகின்றது.

சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸை எதிர்க்கும் மிகப் பெரிய சக்தி ஐ. ஜ. மு. அதில் கம்யூனிஸ்டுகளும உள்ளனர். இன்னும் இதர 5 காங்கிரஸ்—எதிர்ப்புக் கட்சிகளும் உள்ளன. இன்று வரையில் பிரஜா கட்சி ஐ. ஜ. மு.வின் ஒரு உறுப்பாக இரண்டாவது பெரிய உருப்பாக இருந்துவந்துள்ளது. ஆனால் சோஷலிஸ்ட் கட்சி ஐ. ஜ. முவை விட்டு ஒதுங்கி நின்று வந்துள்ளது. ஆகவே இத்தகைய வேறுபட்ட இரு கட்சிகளின் கலப்பினால் ஒரு நெருக்கடியான நிலைமை எற்பட்டுள்ளது.

ஐ. ஜ. முவைக் கலைப்பதென்ற பேச்சு, ஐ. ஜ. முவைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று விரும்பும் இதர கட்சிகள் இருப்பதைப் புறக்கணிப்பதாகும். மேலும் ஆளும் கட்சியினர், ஜனங்களால் வெறுக்கப்பட்ட புது வரித் திட்டங்களை யெல்லாம் கொண்டுவரும்போது எதிர்ப்பு அணியை பலவீனப்படுத்துவதென்பது சோஷலிஸ்ட் கட்சியினுடையவோ, அல்லது வேறெந்த காங்கிரசல்லாத கட்சியினுடையவோ நோக்கமாக இருக்க முடியாது.

ஆகவே, சென்னை சட்டசபையில் ஐ. ஜ. மு. வைத் தவிர புதிய பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி, ஒரு தனிக்கட்சியாக, செயல்படுவதற்கு ஒரு வழிவகையைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகிறது. அதே சமயத்தில் சட்டசபைப் பிரச்னைகளைப் பொறுத்தமட்டில், பலனுள்ள முறையில் ஒன்றுபட்ட எதிர்ப்பைக் கொடுப்பதற்கு, அந்தக் கட்சி ஐ. ஜ. மு.வுடன் சேர்ந்து நிற்கலாம்.

இன்றிரவு நான் பம்பாயிக்குப் புறப்படுகிறேன். பிரஜா—சோஷலிஸ்ட் கட்சிக்கும் ஐ. ஜ. மு.வுக்கும் உள்ள உறவுப் பிரச்னை விவாதத்திற்கு வரும்போது நான் பிரஜா—சோஷலிஸ்ட் மகாநாட்டில் கலந்து கொள்வேன். சென்னையிலுள்ள நிலைமைகளுக்கேற்றவாறு இப்பிரச்னை அனுபவ சாத்யமான முறையில் தீர்த்து வைக்கப்படுமென்று நான நம்புகிறேன்."

ஹோட்டல் தொழிலாளர் சங்கத் திறப்பு விழா

சாத்தூர், செப். 23—

சாத்தூர் ஓட்டல் தொழிலாளர் சங்கத் திறப்பு விழா 21-9-52 மாலை 6 மணிக்கு தோழர் கே. தங்கமணி [illegible] அவர்களின் தலைமையில் நடைபெற்றது. [illegible] திறந்துவைத்து [illegible] ல் நடைபெற்ற கூட்டத்தில் [illegible] கிருஷ்ணன் [illegible] வகித் [illegible] தோழர் கே. [illegible] போது [illegible] [illegible]

விடுதலையடைந்த தோழர்களுக்கு வரவேற்பு!

நெல்லை சதிவழக்குத் தோழர்களை விடுதலை செய்யக் கோரிக்கை

சிவகிரி, செப். 23—

சங்கரன்கோவில் தாலூகா சிவகிரிக்கு 1 மைல் பக்கத்திலுள்ள விஸ்வநாதபேரியில் 20-9-52 சனிக்கிழமையன்று 1949 ஜூலை மாதம் அரிசி கேசில் சம்பந்தப்படுத்தப்பட்டு 16-9-52ல் விடுதலை செய்யப்பட்ட சிவகிரி கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் 8 பேர்களுக்கு ஒரு மாபெரும் வரவேற்பு ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது.

20-9-52 இரவு 6 மணிக்கு விஸ்வநாதப்பேரி தாழ்த்தப்பட்டோர் பொதுச்சாவடியிலிருந்து விடுதலையான தோழர்களை ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டது. ஊர்வலத்தில் சுமார் 800 ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர், வழிநெடுகிலும் ஹரிஜன் விவசாயப் பெண்கள் குலவையிட்டு விடுதலையான தோழர்களை வரவேற்றார்கள் விவசாய இளைஞர்கள் தமிழ் நாட்டின் பூர்வீகக் கலையை எல்லா மக்களும் அதிசயிக்கதக்க முறையில் ஆடி, பாடி ஊர்வலத்தை சோபிக்கச் செய்தார்கள் சதிவழக்குகளை வாபஸ் வாங்குக. ஐக்கிய ஜனநாயக முன்னணி சர்க்கார் வேண்டும். நெல்லை சதிவழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட தோழர் வேலுச்சாமிதேவரை விடுதலை செய், சேலம் சிறையில் குண்டடிபட்டு கிடக்கும் தோழர்களை விடுதலை செய் என்ற கோஷம் விண்ணை எட்டியது.

பின்பு ஊர்வலம் 8 மணிக்கு இவ்வூர் துரோபதையம்மன கோவில் முன்பு வந்தடைந்தது. தோழர் கே. அய்யப்ப நாயுடு அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டமநடைபெற்றது. முதலில் சங்கரன்கோவில் தாலுகா கம்யூனிஸ்டுக் கட்சியின காரியதரிசி தோழர் எம். பாண்டியன் விடுதலையாகி வந்துள்ள தோழர்களை வரவேற்று பேசினார். பின்பு சிறையிலிருந்து வந்துள்ள தோழர்கள் சக்திவேலு, ராமசந்திரன், முத்துசாமி, கே. செல்லையா போன்ற தோழர்கள் தாங்கள் என்றுமே மக்களுக்காக உழைப்பேனென்று மக்களின் மத்தியில் சபதம் எடுத்துக்கொண்டார்கள். சதிவழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்றும் சேலம் சிறையிலுள்ள எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

கடைசியாக தோழர்கள் சண்முகையா, எஸ். எம். கார்க்கி, காந்தி, சக்திவேலு புரட்சி பாடல்கள் பாட கூட்டம் முடிவுற்றது. கூட்டத்திற்கு ஆயிரம் பேர்களும், பெண்கள் 300 உட்பட வந்திருந்தனர். (ந. நி.)

அதிகாரிகள் மகாநாடு

மாயூரம், செப். 25—

விலைவாசி உயர்வால் கஷ்டப்படும் மாயூரம், சீர்காழி டிவிஷன் அதிகாரிகள், கர்ணங்கள் மகாநாடு அக். 5ல் மாயூரத்தில் கூடும்.

குடியரசு உப-ஜனதிபதி அபேட்சகர் மீது வழக்கு

நியூயார்க், செப். 24—

ராச்செஸ்டர் (நியூயார்க்) வாசியான சாம்ஹன் என்ற செனட்டர் ரிச்சர்ட் நிக்சன (குடியரசுக் கட்சி உப-ஜனாதிபதி அபேட்சகர்) காங்கிரசில் இருப்பது சட்ட விரோதம் என்று இன்று பெடரல் ஜில்லா கோர்ட் ஒன்றில் ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். கென்னடி, குடியர[illegible] கட்சியைச் சேர்ந்த நியூயார்[illegible] நிதி கென்னத் ஈ. [illegible] கலிபோர்னியா வக்கீல் [illegible] ஆகியவற்றின் மீது ம் 13,20,000 டாலர் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடுத்துள்ளார்.

அமெரிக்க அரசி[illegible] சட்ட[illegible] படி நிர்வாகப் ப[illegible] தடு வதற்கு டுபட்டு[illegible] து காங்கிரஸ் மெம்பா[illegible] யில் இருப்ப[illegible] க்கப்ப[illegible] ள்ளது [illegible] இவர் வழக்கின [illegible] அந்தமனுவில் [illegible] பாதகம் எ[illegible] என்று கு[illegible] ஆனல் [illegible]

ஹைதராபாத்தில் பிரதமர் நேரு

க்ஷயரோக ஆஸ்பத்திரியைத் திறந்துவைத்தார்

ஹைதராபாத், செப். 24—

ஹைதராபாத் விஜயத்தில், பிரதமர் நேரு, நிலச்சீர்திருத்தம், வேலையில்லாத் திண்டாட்டம், முல்கி கிளர்ச்சிபற்றிய சமீப சம்பவங்கள், சமூக அபிவிருத்தி திட்டங்கள்பற்றி மந்திரிகள், அதிகாரிகளிடம் கலந்துபேசுவார். கம்யூனிஸ்ட் கட்சிமீது விதிக்கப்பட்ட தடை நீக்கத்திற்குப் பிறகு தெலிங்கானா நிலைமைபற்றியும் அவர் தெரிந்து கொள்ள முற்படுவார்.

மந்திரிசபையையும், ஆலோசகர் வெள்ளோடி, பிரதம நீதிபதி ஸ்ரீபத்ராவ் பல்னிட்கார் ஆகியோரை அவர் சந்தித்தார். மௌலானா ஆசாத், இன்று உஸ்மானிய யூனிவர்சிடியைப் பார்வையிட்டார்.

எர்ரகடா ஆஸ்பத்திரியில் க்ஷயரோக வார்டைத் திறந்து வைத்து பிரதமர் நேரு பேசியதாவது:

"காந்தி ஜயந்தியன்று நாடு முழுவதும் சமூக அபிவிருத்தி திட்டம் ஆரம்பமாகும். சர்க்கார் இதை ஆரம்பித்தாலும், சுயமான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கவே இது ஆரம்பிக்கப்படுகிறது. பாரத் சேவாக் சமாஜ ஒரு அரசியலற்ற ஸ்தாபனம. அதில் சர்க்கார் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பினும், அதிகாரபூர்வமற்ற சுய முயற்சிக்கு ஆக்கமளிப்பதே இதன் நோக்கம் என்றார்.

இதுவரை நகரங்களில்தான் கருத்துச் செலுத்தினோம். இனி நாம் கிராமப்புறங்களில் கவனம் செலுத்த வேண்டும். பெரிய நகரங்களில் பெரிய ஆஸ்பத்திரிகள் தேவையாயினும், கிராமப்புறங்களில் சிறு சிறு வைத்திய நிலையங்கள் திறப்பது அவசியம். அதை நடத்த அந்தந்தப் பகுதி கிராம மக்களிடமிருந்து குடும்பத்துக்கு எட்டணா அல்லது ஒரு ரூபாய் கொடுக்கும்படி கேட்கலாம். இம்மாதிரி அபிவிருத்தி வேலைக்கு நாட்டில் நிறைய இடமிருக்கிறது. மக்கள் ஒரு பகுதிச் செலவை ஒத்துக்கொண்டால், சர்க்காரும் முனிசிபாலிட்டியும் அநேக ஆஸ்பத்திரிகள் திறக்கலாம்.

சர்க்கார் செய்வதை விட, வெளியேயுள்ள மக்கள் செய்வதுதான் மிக முக்கியம். வியாதி தடுப்புமுறைகள் முன்காலத்தில் அதிகம் தெரியாது. நல்ல சுகாதார, வைத்திய வசதிகளால் இன்று சில வியாதிகளைத் தடுக்க முடிகிறது. உணவும் வேலையும் தான் சிறந்த நோய் - தடுப்பு சிகிச்சையாகும்" என்றார்.

சீனாவு[illegible] இலங்கை

[illegible] செப். 24—

[illegible] சீனாவிற்கு 1[illegible] ன் ரப்பரை இலங்கை ஏ[illegible] தி செய்கிறது. சீனாவிற்கு ராணுவ முக்கியமான பொருள்களை ஐ. நா. அங்கத்தினர்கள் ஏற்றுமதி செய்யக்கூடாதென்று, ஐக்கிய நாடுகள் தடை செய்திருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இருந்தும் இலங்கை 10-வது தடவையாக ரப்பர் ஏற்றுமதி செய்திருக்கிறது. இம்மாத ஆரம்ப[illegible] 2100 டன் ரப்பர் ஏற்றும[illegible] இவ்வ[illegible] [illegible]

கரூரில் காங்கிரஸ் 12 ஸ்தானம் பெற்ற அதிசயம்!

கரூர், செப். 24—

கரூர் நகரில் போலீசும், காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து சதி செய்து நகர போலீஸ் சட்டம் செக்ஷன் 30ஐ கட்டவிழ்த்துவிட்டு காங்கிரஸ் நகர சபை 5 ஆண்டுகளில் புரிந்த அட்டூழியங்கள், லஞ்ச ஊழல்களை மாற்றுக் கட்சிகள் பொதுக் கூட்டங்கள் போட்டு அம்பலப்படுத்த முடியாமல் தடுத்தனர். எந்த வார்டிலும் கூட்டம் போட அனுமதி கேட்டும் மறுக்கப்பட்டது. தேர்தல் நெருங்க, நெருங்க தோல்வி உறுதி என்று கண்ட காங்கிரஸ் கட்சி 8-வது வார்டில் தனக்கு எதிராகநின்ற அபேட்சகரை 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கி விட்டதாயும், இதே போல் 14-வது வார்டில் நின்ற சுயேச்சை அபேட்சகரையும் ஒரு பெரிய காங்கிரஸ் பாக்டரி முதலாளி ரூபாய் ஏழாயிரத்திற்கு விலை பேசி வாங்கி எதிர்ப்பின்றி வெற்றி பெற்றதாக தம்பட்டமடிக்க ஆரம்பித்துவிட்டதாக பொது மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

மொத்தம் 26 வார்டுகளில் போட்டியிட்டும் 10 ஸ்தானங்களே "காங்கிரஸ் மாட்டு பெட்டி" வெற்றிபெற முடிந்தது! காங்கிரஸ் எதிர்பு கட்சியினருக்கு 16 ஸ்தானங்கள் கிடைத்தன.

தங்கள் லஞ்சம், ஊழல், சுயநலம் இவற்றை அடக்குமுறை, பட்டுத்திரை போட்டு மூடிவிட கனவு கண்ட காங்கிரஸ் கட்சியின் கோட்டை மக்கள் சக்தியால் சுக்கு நூறாகத் தகர்ந்து தரைமட்ட மாகிவிட்டது.

இத்தேர்தலில் காங்கிரஸ் 'மாட்டு கட்சியினர்' 16, 17 வார்டுகளில் சாதி எதிர்ப்பு கோஷத்தை கிளப்பியும் 15-வது வார்டில் சாதியின் பேரை கூறியும் பகிரங்கமாக ஓட்டுகேட்டனர்.

நேருவின் பெயரை 'லேபிளாக' உபயோகித்து தேர்தலில் ஈடுபட்ட காங்கிரஸ்காரர்களின் செய்கை கரூரில் சந்தி சிரிக்கிறது!

தேர்தலில் மக்கள் காங்கிரசுக்கு மொத்தமாக 5 ஆயிரத்து ஐந்நூறு ஓட்டுகளும், காங்கிரஸ் அல்லாத பகுதியினருக்கு ஏழாயிரத்து தொள்ளாயிரம் ஓட்டும் அளித்து தீர்ப்பு கூறியதிலிருந்து காங்கிரஸ் செல்லாக்காசு ஆகிவிட்டது என்று நிரூபிக்கப்பட்டு விட்டது.

கரூரில் காங்கிரசுக்கு பலமாக கல்லறை கட்டப்பட்டு விட்டது. (ந. நி.)

பெரம்பலூர் தாலுக்கா மக்கள் பரிதவிப்பு

உடனே நிவாரணம் செய்யவேண்டும்

பெரம்பலூர், செப், 23—

பெரம்பலூர் திரு எம். பழனியாண்டி (எம்.எல்.ஏ.) அறிவிப்பதாவது:

பெரம்பலூர் தாலூகா முழுவதிலும் பருவமழை தவறியதின் காரணமாக ஏழை விவசாயிகளுக்கும் ஹரிஜனங்களுக்கும் உணவு தான்யம் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. ஏழை விவசாயிகளும் ஹரிஜனங்களும் உணவு தானியங்களை அதிக விலை கொடுத்து வாங்க சக்தியற்று இருக்கிறார்கள். ஆதலால் சர்க்கார் தாலூகாவில் உள்ள எல்லா கிராமங்களிலும் நிவாரணக் கடை ஏற்படுத்தி மைலோவும் அரிசியும் சப்ளை செய்ய வேண்டும்.

2. கிணறுகளில் தற்போது [illegible] தண்ணீர் கிடைப்பதே [illegible] மாக இருக்கிறது. இன் [illegible] ஒரு [illegible] கா லத்திற்குள் [illegible] விடில் தாலூகா [illegible] உள்ள கிணறு [illegible] தண்ணீர் கிடைக் [illegible]

ஏ. கே. ஆர். ஓடு தொழிலாளர் வேலை நிறுத்தம்!

சென்னை, செப். 25—

23-9-52 செவ்வாய் அன்று கோயம்பேடு கிராமத்திலுள்ள ஏ. கே. ஆர். ஓடு கம்பெனி வேலை நிறுத்தம் செய்துள்ளது. 200 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துக் கொண்டுள்ளனர். 150 பேர் கம்பெனிக்குள்ளேயேயிருந்துக் கொண்டு வேலை செய்கிறார்கள். 24-9-52 புதன் அன்றும் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பவில்லை. போலீஸ் கெடுபிடி மிக கடுமையாயிருந்தது. வெளியேயிருந்த தோழர்கள் வேலைக்கு செல்லும் தோழர்களை வேலைக்கு போகாதிருக்க வேண்டிக் கொண்டார்கள், அவர்களை போலீஸார் கைது செய்துக் கொண்டு போய் விட்டார்கள். இன்றும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கிறது.

கோரிக்கைகள்:—

1. போனஸ்.
2. வேலையிலிருந்து நீக்கிப் பழி வாங்கப்பட்ட தோழர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.
3. கூலி உயர்வு.
4. வேலை பளுவை குறைத்தல்.

வானொலி

செப். 28 ஞாயிறு

சென்னை (41.32மீ)

காலை

7-00 ஸ்வாகதம்
7-15 தமிழில் செய்தி
7-30 பாதல்
8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்

1-00 கே. ஆர். லக்ஷ்மி --குரலிசை
1-30 கீதமஞ்சரி
1-40 ஹிந்தியில் செய்தி
2-00 தமிழில் செய்தி
2-10 குரல்வகை
2-35 திருச்சியில் உள்ளபடி
3-00 விஜயதசமி வேடுகளு
4-00 ஓட்டன் துள்ளல்
4-15 நிச்சிதார்த்த-நாடகம்
4-30 ஐரோப்பிய சங்கீதம்

மாலை

5-30 பி. ஜி. ரத்னப்பா-பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்தி
6-10 அறிவிப்புகள்
6-15 மங்களம்-ராமமூர்த்தி -பாட்டு
6-45 கே. கணேசன்---பாட்டு
7-15 தமிழில் செய்தி
7-30 கதம்பம்
7-45 சுசிலா அச்சுதராமன் --பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 காளிதாசன்--பேச்சு
9-30 காளிதாஸ-ஹ்ருதயம்
9-45 ஐரோப்பிய சங்கீதம்

திருச்சி (389.6மீ)

காலை

7-10 கீதாரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 எஸ். ஞானம்பாள்-வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்தி
8-15 சித்ரகானம்

பகல்

12-00 நிரைகானம்
12-30 சூர்யகாந்தி
1-00 [illegible]ணிமலர்
1-30 [illegible]கஸ்வரம்
1-40 [illegible]ந்தியில் செய்தி
1-50 குரல்வகை
2-00 தமிழில் செய்தி
2-10 பெண்ணுலகம்
2-30 சென்டு-இசை நிகழ்ச்சி

மாலை

5-30 எஸ். ஞானம்பாள்-வீணை
5-45 டி. கே. வல்லபை-பாட்டு
6-05 அறிவிப்புகள்
6-10 நீங்கள் கேட்டவை
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 சித்ரகானம்
7-45 குற்றமும் தண்ட[illegible]
8-00 சக்தி விஜயம்
9-00 ஆங்கிலத்தில் [illegible]
9-15 நிரபராதி-நாடகம்
9-45 சாஸ்திரிய சங்கீதம்

ஒரு கோடி டாலர் பணமோசடி

வாஷிங்டன், செப். 24—

அமெரிக்க சர்க்காருக்குச் சொந்தமான உணவு தானியங்களில் ஒரு கோடி டாலர் பண மோசடி நடந்திருப்பதாக அமெரிக்க செனட் விவசாயக் கமிட்டி கண்டுபிடித்துள்ளது.

செகண்டரி கல்விமுறை பற்[illegible] தீர்க்கமான பரிசீலனைக்கு ஏற்[illegible]

இந்திய சர்க்கார் கமிஷனை நியமிக்கிறது

கமிஷனில் இரு வெள்ளையர்

புதுடில்லி, செப். 24—

இந்திய சர்க்கார் பின்வரும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு செகண்டரி கல்விக் கமிஷனை நியமித்துள்ளது:—

டாக்டர் ஏ. லக்ஷ்மண [illegible] லியார், சென்னை [illegible] அத்யட்சகர் [illegible] திருமதி ஹன்[illegible] பல்கலை[illegible] 3. திரு. [illegible]

[illegible] பிக்கும்படி கேட்[illegible] பட்டுள்ளது.

இந்தக் கமி[illegible] ஒரு இராசிய[illegible] தனது அலுவல[illegible] கும் காலத்[illegible] இராசிய சர்க்[illegible] லுடன் தனது பிரதி[illegible] இந்தக் கமிஷனில் அங்கத்[illegible] ராக நியமித்துக்கொள்ள[illegible]

இந்தியாவின் செகண்[illegible] கல்வியின் நிலைமை பற்[illegible] சகல அம்சங்களையும் பரிசீ[illegible] தும், செகண்டரி கல்வி[illegible] குறிக்கோள்கள், ஸ்த[illegible] அமைப்பு, பொருளா[illegible] பற்றி குறிப்பாக ஸ்தாபனம் [illegible] யில் இருக்கவேண்டிய [illegible] அபிவிருத்தி செய்வது குறித்த [illegible] எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் [illegible] கள்பற்றி ஆலோசனை கூறுவது, ஆரம்பக் கல்விக்கும், அடிப்படைக் கல்விக்கும் பல்கலைக் கழகக் கல்விக்கும் [illegible] செகண்டரி கல்விக்கும் இருக்கவேண்டிய தொடர்பு, பலவித மான செகண்டரி பள்ளிகளின் பரஸ்பர அமைப்பு, இன்னும் இதர பிரச்னைகளைப் பற்றி பரிசீலனை செய்து ரிப்போர்ட் செய்வதே இந்தக் கமிஷனின் வேலையாகும்.

Edited, P[illegible] by G. Alava[illegible] Press, Su[illegible] 38, Moun[illegible]